

## தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்

## லண்டன் தமிழ் நாடகப் பள்ளி

### 40வது ஆண்டு நிறைவு

# நாடக விழா 2018

**29 September 2018, Watersmeet Theatre**

CROYDON METROPOLITAN COLLEGE

A CENTRE OF ACADEMIC EXCELLENCE

# ENROL NOW FOR SEPTEMBER ENTRY

## UK's ONLY FULL TIME COLLEGE RUN BY SRI LANKANS

## 11+ GCSE A-LEVEL

- 11+ COACHING FOR GRAMMAR SCHOOL ENTRY
- FULL TIME COURSES IN ALEVEL, GCSE, HND & HNC
- ONE-TO-ONE AND GROUP TUITION
- UCAS PREPARATION
- OFSTED APPROVED

**TOP UNIVERSITIES FOR CMC STUDENTS AGAIN!**

*· Oxford University · University of Warwick ·*
*· Imperial College London · Kings College London ·*
*· University of Leeds · University of Exeter · UCL ·*
*· University of Reading · University of Bristol ·*
*University of Kent ·*

**OFFICIAL EXAMINATION CENTRE FOR ALL UK EXAM BOARDS**

SUBJECTS PROVIDED HERE AT CMC:

- MATHEMATICS
- ENGLISH LITERATURE
- BIOLOGY
- CHEMISTRY
- PHYSICS
- GEOGRAPHY
- HISTORY
- GOVERNMENT & POLITICS
- PSYCHOLOGY
- ECONOMICS
- RELIGIOUS STUDIES
- BUSINESS STUDIES
- PHILOSOPHY
- GERMAN
- FRENCH
- SPANISH
- ICT
- ESOL

*"Excellent teaching, focused classes and the perfect environment to achieve the best results!"*

MATTHEW EAGLING
Imperial College, London

*30-32 SOUTHEND, CROYDON, SURREY, CR0 1DN*
*Tel: 02086885777*
*Fax: 02086885776*

# தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின்
**40 ஆவது ஆண்டு ஆரம்பம் இலங்கை 1978**

# லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின்
**15ஆவது ஆண்டு ஆரம்பம் லண்டன் 2003**

## 40 ஆவது ஆண்டு நிறைவு

# தமிழ் நாடக விழா 2018

## நாடகங்கள் :

**1. அமைதிப் பூங்கா**

புதிய சிறுவர் நாடகம் லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள்

**2. அது**

தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள் எழுதி தயாரித்த புதிய நாடகம்

**3. கண்ணாடி வார்ப்புகள்**

லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள் முக்கிய பங்கேற்று நடிக்கும் புதிய தயாரிப்பு

**4. நீண்ட ஒரு பயணத்தில் ..**

எமது நாடகங்களின் ஒரு தொகுப்பு

## நெறியாள்கை க. பாலேந்திரா

29-09-2018
Watersmeet Theatre

"இளையவர்களே எமது எதிர்காலம்" -
"தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்"
40 ஆண்டுகள் இடைவிடாமல் தொடரும் தமிழ் நாடக இயக்கம்.


## Tamil Performing Arts Society
107 Somervell Road, Harrow, HA2 8TZ
Tel: 020 8422 2859

# At A Glance.....

**1978**
Following the adaptation of 'The Glass Menagerie', TPAS forms with productions of 'Pasi' and an adaptation of 'Old World'

**1979**
Adaptations of 'The House of Bernada Alba','The Exception and the Rule' and 'The Gap' produced along with 'Natkali Kaarar.

**1980**
'Muhamilatha Manitharhal', 'Sampandham', Muthusamy's 'Suvarottikal' produced with Colombo Medical students

**1981**
Balendra produces two short plays with Colombo Royal College Students. 'Araiyum Kuraiyum' produced.

**1982**
'Thuglaq' produced with a cast over 40 people. 'Kannadi Varpuhal' is televised on Rupavahini.

**1987**
Now in London, TPAS produces a presentation of Sri Lankan poems 'Our Nation on Fire' following a series of repeat performances.

**1991**
TPAS starts to produce Tamil plays with children in collaboration with Brent Tamil School. First annual Tamil Drama Festival in London.

**1993**
TPAS spreads its wings to European states continuing its Tamil theatrical journey from Holland to Switzerland, France and Norway.

**1994**
TPAS crosses the Atlantic to perform in Toronto for the first time, which paves the way to 4 more visits in the consequent years.

**1996**
TPAS crosses the Pacific to perform in Sydney, Brisbane and Melbourne for the first time.

**1997**
Balendra produces 'Eppo Varuvaro' based on Beckett's 'Waiting for Godot' with Brunel University students.

**1998**
TPAS stages 'The Exception and the Rule' with London born children. First production of 'Pearvu' depicting the mass exodus of Jaffna in 1995.

**2003**
TPAS establishes the first Tamil Drama School in London.

**2009**
Another major adaptation, Ariel Dorfman's 'Death and the Maiden' titled 'Maranathul Valvu' is staged.

**2010**
TPAS visits Chennai for the first time with performances of 'Mazhai' and 'Pirathiyeha Katchi'

**2013**
TPAS revisits Sri Lanka with performances in Jaffna and Colombo. Staging of Shakespeare's 'The Tempest' in Tamil in London.

**2014**
Another ambitious adaptation of Ibsen's 'The Enemy of the People'.

**2015**
TPAS celebrates 25 years of Tamil drama productions with children in London. 'Nettai Marangal' using Bharathiyar's poems produced.

**2016**
TPAS celebrates 25 years of continuous Tamil Drama Festivals in London.

**2017**
TPAS's second book, a Bertolt Brecht adaptation, 'Yugatharmam' published in Sri Lanka.

# கலையுலகில் எங்கள் பயணம்...

எமது 40 ஆண்டு நிறைவு நாடக விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இன்று நாம் எமது 40 ஆவது ஆண்டு நிறைவையும், எமது லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் 15ஆவது ஆண்டு நிறைவையும் கொண்டாடுகிறோம். தமிழ் நாடகச்சூழலில் இப்படி நிகழ்வது அபூர்வம். இலங்கையில் 1978 இல் ஆரம்பித்த எமது நாடக இயக்கம் தொடர்ச்சியாக இன்றும் உயிர்ப்புடன் இருப்பது மகிழ்ச்சி. இது மிக நீண்ட பயணம். இலங்கையில் நான்கு வருடங்களும் பின்னர் லண்டனில் தளமமைத்து உலகநாடுகள் பலவற்றிற்கும் சிறகு விரித்திருக்கிறோம். நாம் சென்று ஆற்றுகைகள் செய்த நாடுகளில் எமது நாடக முயற்சிகள் பல கலைஞர்களுக்கு ஒரு அகத்தூண்டுதலை கொடுத்து அவர்களை இயங்க வைத்திருக்கிறது என்பது எமக்கு மகிழ்ச்சி. எந்தப் பெரும் அமைப்புகளினதும் ஆதரவு இல்லாமல் பார்வையாளர்கள் உங்கள் ஆதரவுடன் மட்டுமே, சுயாதீனமாக கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறோம்.

திரும்பிப் பார்க்கும்போது எமக்கே பிரமிப்பாக இருக்கிறது. எமது 40 ஆண்டு கால நடவடிக்கைகளை இயலுமான வரையில் முற்றாக ஆவணப்படுத்த முயற்சி செய்து வருகிறோம். இந்த மலரின் பக்கங்களில் இந்த முயற்சியின் சில அம்சங்களை காணலாம். நாடகப் பிரதிகளின் நூலாக்க முயற்சிகளும் செய்து வருகிறோம்.

நாடக இயக்கம் உயிர்ப்புடன் செயலாற்ற பல துறைக் கலைஞர்களது ஒத்துழைப்புத் தேவை. எம்மோடு தன்னார்வத் தொண்டர்களாக, அர்ப்பணிப்புடன், பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கும் அனைத்துக் கலைஞர்களையும் தற்போது நன்றியுடன் நினைவு கூருகிறோம். எமது கலை முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு கொடுக்கும் ரசிகர்களுக்கும் தமிழ் வியாபார நிறுவனங்களுக்கும் ஊடகங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

ஓர் இனத்தின் கலாசார செழுமை அதன் அரசியல் சமூக நோக்கினை, அதன் ஆன்மாவை பண்படுத்துவதாய் அமையும். நாம் உலகின் எம்மூலையில் இருந்தாலும் எமது தேசிய வாழ்வுக்கு ஆரோக்கியமானதொரு பங்களிப்பினை நல்குவதெனில் எமது சிந்தனை செழுமையும் விசாலமடைவது இன்றியமையாதது. இதற்கு எம்மவரின் கலாரசனை மட்டம் உயர்வதும் உறுதியானதொரு பங்களிப்பாகும். அந்த வகையில் கண்ணாடி வார்ப்புகள் போன்ற நாடகங்கள் திரும்ப திரும்ப மேடையேறவேண்டும்.

பெரும்பான்மையான தமிழர்களின் கலாரசனையை வணிக சினிமாவின் தாக்கம் மழுங்கடித்து விடக் கூடியது. தென்னிந்திய தமிழ் வணிக சினிமா, தொலைக்காட்சி ஆதிக்கம் உலகளாவிய அளவில் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் வியாபித்துள்ளது. அதன் பாதிப்பை லண்டனில் முன்னெப்போதும் இல்லாதவாறு இப்போது உணரக்கூடியதாக உள்ளது இந்த சூழலில் காத்திரமான நாடக முயற்சிகளை முன்னெடுப்பது மிக மிக கடினம். இருந்தும் நாம் கடின உழைப்புடன், அர்ப்பணிப்புடன் தான் இதனை சாதித்திருக்கிறோம்.

சிறுவர் நாடகங்களின் 25வது ஆண்டு பூர்த்தியை 2015லும் லண்டன் நாடக விழாக்களின் 25 ஆண்டு பூர்த்தியை 2016லும் கொண்டாடினோம்.

புகலிடச் சூழலில தமிழ் வளர வேண்டுமானால் சிறுவர்களும் இளையவர்களும் தமிழில் பேச வேண்டும். நாடகப் பயிற்சி தமிழை உணர்வுபூர்வமாகப் பேசவைக்கிறது என்பது எமது நம்பிக்கை. இந்த நாட்டில் வாழும் இளையோருக்கு தமது வேரினை அறிந்திருக்க வேண்டிய தேவை உள்ளது. அப்போதுதான் அவர்கள் இந்த மண்ணில் தன்னம்பிக்கையுடன் வாழ முடியும். அந்த வகையில் சிறுவர்கள் நடிக்கும் "அமைதிப் பூங்கா" நாடகம் முதல் முறையாக லண்டனில் மேடையேறுகிறது.

.எமது சிரேஷ்ட மாணவர்களான லண்டனில் பிறந்து வளரும் இளையவர்கள் தாமாகவே எழுதித் தயாரித்த ‘புதிய பயணம்’ என்ற நாடகம் சென்ற வருடங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து இன்று அவர்களது ‘அது’ நாடகம் மேடையேறுகிறது.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் எமது வெற்றி நாடகங்களுள் ஒன்று. முதன்முதலாக இலங்கையில் 1978 ஆம் ஆண்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எம்மால் மேடையேற்றப்பட்ட இந்த நாடகத்தை லண்டனில் எமது இளையவர்களை இணைத்து மேடையேற்றுவது எமக்கு மிக மகிழ்ச்சியைத் தருகிறது. லண்டனில் வளரும் இளையவர்களுக்கு இது எளிதான நாடகமல்ல. இருந்தும் இந்த சவாலை துணிவுடனும் கடின உழைப்புடனும் ஏற்றிருக்கிறார்கள்.

எமது பட்டறையில் வளர்ந்த இளையவர்கள் இந்த கலைப் பயணத்தை தொடருவார்கள் என்ற நம்பிக்கை, எமக்கு இருக்கிறது. இன்றைய நிகழ்வு குறித்த கருத்துக்களை எமக்கு அறியத்தரவும்.

**பாலேந்திரா-ஆனந்தராணி**
**Tamil Performing Arts Society**
**London Tamil Drama School**
107 Somervell Road, Harrow, HA2 8TZ
Tel: 020 8422 2859

# 2017 நாடகவிழா


















# வாழ்த்துகிறேன்.....

- பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி -



‘சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்’ என்றான் மகாகவி பாரதி. இப்பொழுது, நாடகத்தமிழ் நானிலம் முழுவதும் ஒலிப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள், லண்டன் அவைக்காற்று கலைக் கழகக் குழுவினர். அவர்கள் லண்டனில் தமது 40 வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றனர். இந்த நாடகக் குழுவினருக்கு ஆணிவேராக இருக்கும் ஆனந்தராணி-பாலேந்திரா தம்பதியருக்கும், நாடகக் குழுவினருக்கும் என் வாழ்த்துக்கள்.

என்னுடைய ‘மழை’, ‘பசி’, ‘சூறாவளி’ என்ற மூன்று நாடகங்களும் அவைக் காற்றுக் கலைக் கழகத்தினரால் பல தடவைகள் மேடை ஏற்றப்பட்டிருக்கின்றன. சொல்லப்போனால், இந்தியாவில் அவை மேடை ஏறியதைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாக பாலேந்திரா குழுவினரால் உலகமெங்கும் மேடை ஏறி இருக்கின்றன என்பதையும் சொல்லியாக வேண்டும்.


நான் அக்குழுவினருடன் சுவிட்ஸர்லாந்துக்குச் சென்றபோது, இவர்கள் மேடையேற்றிய நாடகங் களுக்குக் கிடைத்த வரவேற்பு என்னைப் பிரமிக்க வைத்தது. அரசியல், சமூகப் பிரச்னைகளை வெறும் கோஷங்களாகாமல், அழகியல் உணர்வுடன் இவர்கள் அணுகும் முறை பாராட்டத்தக்கது.

‘Catch them young’ என்பதற்கேற்ப கடந்த சில ஆண்டுகளாகச் சிறார் நாடகப் பட்டறைகள் நடத்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருவது மகிழ்ச்சிக்குரியது. தமிழ் நாட்டில் இத்தகையப் பயிற்சிக் கூடங்கள் இல்லவேயில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

விழா சிறப்பாக நடந்தேற என் வாழ்த்துக்கள்!

## K Balendra proves indomitable in theatrical projections

by K S Sivakumaran



For more than 40 years a highly developed theatrical personage is Kanagaratnam Balendra, originally from Lanka, and now a Britisher, contributing to British theatrical performances in the Thamil language. He with his talented performing artiste wife Aanantharani, together with his troupe of youngsters and seasoned older artistes, have reportedly given polished and professionally equipped performances not only in the U K, but also elsewhere in places like Lanka and Canada. It is indeed a laudable contribution and he needs encouragement for his untiring efforts.

I had been a witness to see some of his plays, long ago in the 1970s, mainly translated presentations which again was commendable because he opened the window for the Thamil-speaking audience to be familiar with western drama.

Balendra is not only an engineer but also vested with great talent as an actor and director of plays.

It is my pleasure to congratulate him and all the participants in his Avaikarru Kalaik Kalagam for the sustained endeavour in creating an atmosphere of love for the theatre in the minds of different generations.

It all started with his staging of Tennessee Williams' "The Glass Menagerie" in Thamil as "Kannaadi Vaarpukal" in 1978. Until 1982, he has produced several plays including one of Lorca's plays with voluntary performers. Living in London for the past 35 years, he has achieved a professional status as a theatreman for the last 15 years he is running a school for drama and theatre training young people.

The practical knowledge gained through constant practice Balendra and Aaananthrani stand tall in making us all Lankans proud of their innate talents shown in the initial stages of their love for the theatre.

All is Well.

# TPAS at 40



## A Forty Year Journey: the remarkable tale of TPAS, a vibrant Tamil theatre group for the Tamil community in the U.K. and beyond

It's origin, growth, programs and impact

Eswaran Selvaraja
Boston, USA

*From its little-known origins, TPAS (Tamil Performing Arts Society) has moved out of its homeland and reborn and grown as an important creative venture of theatre for expatriate Tamil community of Greater London. With a phenomenal record of many adaptations and new scripts (more than 150 productions in all) over the last forty years, the founders have made an unprecedented imprint on the history of Tamil theatre. Its major creative periods have been mostly in Sri Lanka and the U.K. with guest performances in cities of Europe, Canada and Australia. Besides stage performances, the group is actively involved in training young and old members of the community to broaden the appreciation of theatre and music and have a resource base for theatrical productions. The legacy of TPAS will be a great story for all and an inspiration for many.*

"The theatre is the only institution in the world which has been dying for four thousand years and has never succumbed. It requires tough and devoted people to keep it alive"

John Steinbeck, American writer, *"Once there was a war"*

The roots of TPAS (Tamil Performing Arts Society) go back to the seventies in Sri Lanka. Forty years ago a very devoted group of young theatre enthusiasts began experimenting with well known adaptations of renowned stage plays firstly to play for a curious urban community and later to an uninitiated and province-based Tamil audience. The formative years of TPAS, however, posed numerous challenges, particularly because of the entrenched characteristics of the Tamil theatre. Against all odds and avoiding the escapist approaches of Tamil cinema and its replication of sorts -- claimed as stage plays -- TPAS made a pioneer effort in laying the foundation for a series of Tamil plays which conformed to conventions of theatre. In the past, Tamil theatre at its best was based on folk and mythology. But there were few takers of that tradition in modern times in spite of its richness. Recognizing such an environment and viability, Balendra and Anandarani made a conscious decision to offer an alternative to untheatrical performance groups and their listless creations. Tamil audience in a phase of discovery particularly through adaptations such as Glass Menagerie and The Exception and the Rule which opened a new world of drama.

Encouraged by the surprising success of their maiden efforts, Balendra and Anandarani made a lasting commitment to their creative endeavor of production and promotion of Tamil theatre. Their message spread, productions grew and audience increased. A trailblazer of Tamil theatre TPAS had arrived.

But as the Sri Lankan society at large went through a dismal phase of racial conflict, innovators and endeavors of all kinds in the Tamil community were badly hit. Disruptions and uncertainties of life forced the founders to move to the U.K. Though regrouping was unrealistic, re-creating a U.K-based cast and crew was the feasible option. Moreover, with a growing expatriate Tamil community, TPAS found a new creative environment and talent despite the critical survival needs of the participants and audience. Nevertheless the sequence of production resumed in 1983.

Playwrights of recognition and plays have remained minimal. Paucity of Tamil scripts suitable for quality theatre, required adaptation of some of the best plays in the west: Glass Menagerie, Waiting for Godot, Tempest and many more (Playwrights - Bertolt Brecht, Ibsen,Pinter, Alexei Arbuzov among them). Thanks to TPAS, now there are several translations, mostly by volunteer

translators, available to any theatre group. A major goal of TPAS has also been the promotion of innovative playwrights in Tamil and their plays, one day, may rise to the rank of plays of Broadway, the West End or India's regional theatre.

While the creative interests translate into stage plays, the production and continuation of plays face significant financial and operational struggles even for a single one act play.

"All the world may be a stage, but theatre is a tough way to make a buck."
Kevin Brass, Wall Street Journal, 3, Nov. 2014.

This observation relates to a well-established sector of performing arts in the west. Still predominantly an amateur operation, Tamil theatre has not reached, unlike the mainstream theatre groups in the west, any financial viability. But TPAS is not even close to becoming profitable financially. Considering the Tamil audience in any country, filling the seats has been a major problem. In reality, as producers would confide, they continue to self-finance their productions and depend almost entirely on volunteers as cast and crew. Irrespective of financial disincentives, there has been a growing interest and participation in theatre because of a large population of London area Tamil residents. Such Tamil communities with similar interests and trends are also in Toronto, Paris and Melbourne, where TPAS has received invitations and found responsive audience. TPAS did not forget Jaffna or Batticaloa. (Events and activities in Sri Lanka are given in the List.) With these accomplishments alone, one should acknowledge the tremendous artistic and cultural contribution of TPAS throughout its incredible forty-year journey. Yet one may see the group only as a niche of committed people for quality plays. But that situation shall come to pass with more groups coming on stage for more musicals, some tragedies and many comedies.

In addition to developing and encouraging the creation of interesting scripts and adaptations, TPAS has paid significant attention to reach out to enroll novices, students and potential actors through workshops and discussions. Such workshops include role-playing, improvisations and character analysis. Some of the most promising participants are Tamil children in secondary schools who get scripts from children's theatre and perform their own versions for fun and entertainment under the guidance of Anandarani.

How did TPAS succeed in producing so many plays and workshops? (Please see a complete list of productions, events and activities elsewhere in this brochure.) A strong spirit of volunteerism has been the mainstay of TPAS, which is not dependent on grants, donations or funding sources. But participants from different skills for the theatre and age continue to play various roles and provide assistance until the last day of performance. The enthusiasm of the volunteers has been so remarkable and enduring, some of the participants who joined as young adults are still continuing to participate even after marriage. And many well-wishers, playwrights and media personnel offer invaluable advice and assistance.

Highlights of TPAS 40 celebrations are as follows:
a. Amaithi Poonga a play by Johnson Rajkumar
b. Athu a play by London Tamil Youth
c. A condensed version of The Glass Menagerie
d. A collection interesting scenes drawn from some of the popular plays staged by TPAS

TPAS has shown an impressive track record of good theatre and educating the community to identify and appreciate quality theatre. The group has a strategic vision for the future. Such a vision and its creative outcomes, in the past and for the future, will be a lasting testament to the artistic mission of TPAS.

**Let's wish the TPAS at 40 many years of creativity, a bounty of talent pool, interesting scripts and growing audience.**

# 2016 நாடகவிழா








# கண்ணும் கருத்தும் கருமமும் ஆயினார்

**குழந்தை ம.சண்முகலிங்கம்.**

தாயகம், திருநெல்வேலி. 11.07.2018

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் தனது அரங்கப் பணியில் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்கிறது என்பதை அறியும் போது வியப்பை விஞ்சிய பெருமிதம் நெஞ்சை நிறைக்கிறது. தமது தாய் மண்ணிலும், தம்மைத் தத்தெடுத்த தண்ணளி மிக்க மேலைப் புலங்களிலும், கருமமே கண்ணாக நின்று, தமிழுக்காகவும் தமிழ் அரங்குக்காகவும் அரும்பணி ஆற்றிவருகின்ற இக்கழகத்தாரை வாழ்த்தி வணங்குவதல்லால் வேறொன்றறியேன். அவர்தம் பற்றுறுதியும் பரந்த நோக்கும் பணியின் பால் அவர் கொண்ட நேசமும் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

பலரை இணைத்து, தளராது தொடர்பணி ஆற்றிவருதல் என்பது - தமிழர்தம் வரலாற்றைப் பொறுத்தவரையில் - அரும் பெரும் சாதனையாகவே அமைகிறது. பெரியவர் தமக்கான அரங்கப்பணிகளோடு, சிறுவர்தம்மைத் தம் தாய்மொழியோடும் தம் கலைகளோடும் வளர்த் தெடுக்கும், சிறுவர் அரங்க மற்றும் இளையோர் அரங்க முயற்சிகளையும் ஒன்றிணைத்து வளர்த்து வரும் அவர்களது செயற்றிட்டமானது முழுமை நிறைந்த ஒன்றாக இருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. அத்தோடு அது நீண்ட நோக்கினைக் கொண்டதாகவும் உள்ளது.

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் 1978ல் ஆரம்பிக்கப்பட்டு, 1982 வரை இலங்கையில் மிகச் சிறப்புறத் தனது பணியினை ஆற்றி வந்தது. இக்காலப் பகுதியில் ஏறக்குறைய 20 நாடகங்களைத் தயாரித்ததோடு 120 தடவைகளுக்கு மேலான மேடையேற்றங்களையும் நிகழ்த்தியுள்ளது. இந்நாடகங்கள் சுய படைப்புக்களாகவும், பிறர் படைத்த தமிழ் நாடகங்களாகவும், பிறநாட்டுப் படைப்புக்களின் மொழிபெயர்ப்புக்களாகவும் அமைந்திருந்தன. இவை வெவ்வேறு வகையினவாகவும் பல்வேறு மோடிகளில் அமைந்தனவாகவும், உலகப் பொதுமையான மானிடப் பிரச்சினைகளை ஆய்வு செய்வனவாகவும் அமைந் திருந்தன. பல்பரிமாணங் கொண்ட இப்படைப்புக்கள் பொதுமக்களுக்கும் அரங்கவியலாளர்களுக்கும் பல வழிகளில் பயன்பட்டு வந்தன. திரு.பாலேந்திராவும் ஆனந்தராணியும் அண்மைக் காலங்களில் மீண்டும் இலங்கைக்கு அடிக்கடிவந்து நாடகக் களப் பயிற்சிகளையும், நாடக மேடை யேற்றங்களையும் நிகழ்த்தி வரு கின்றனர். வளர்ந்து வரும் தமது பட்டறிவினைத் தாய்மண்ணில் விதைப்பதென்பது, அவர்களது பரந்த உளப்பாங்கின் உயரிய சாட்சியாக அமைந்துள்ளது.



1982 முதல் லண்டனைத் தளமாகக் கொண்டு உற்சாகத்தோடு செயலாற்றி வரும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் 80க்கு மேற்பட்ட நாடகங்களைப் படைத்ததோடு 400 வரையிலான ஆற்றுகைகளையும் நிகழ்த்தியுள்ளது. எம்மை பொறுத்தவரையில் இது ஓர் அசுரசாதனையாகவே உள்ளது. தொழில்முறை அரங்காக இல்லாது, பயில்நிலையாளர்தம் அரங்காக இருந்து கொண்டு இத்தனை வல்லமையோடும், வலுவோடும், இடையறாத்தன்மையோடும், பலரையும் இணைத்துக்கொண்டு தொடர் கருமமாற்றுதல் என்பது போற்றப்படவேண்டிய ஒன்றே. இவ்விடத்தில், 65 ஆண்டுகளாக இடையறாத்தன்மையோடு தொடர்ந்து சிறப்புற இயங்கிவரும் திருமறைக்கலாமன்றமும் என் ஞாபகத்தில் வந்து முன்நிற்கின்றது. இந்த வகையில் அரங்கப் பணிமூலம் உலகளந்து நெடிதுயர்ந்து நிற்கும் திரு. பாலேந்திரா ஆனந்தராணி தம்பதியினரையும் அருட்திரு மரியசேவியர் அடிகளாரையும் நீடு வாழ வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சிறுவர், கட்டிளமைப் பருவத்தினர், வயது வந்தவர், வயதாலும் வளைத்து விட முடியாத முதியவர் என அனைத்து வயதினரும் இணைந்து செயற்படும் சூழ்நிலைமையை 40 ஆண்டுகளாக நிலைநிறுத்தி வருவதென்பது பாலேந்திரா தம்பதியினரதும் அவர்களோடு இணைந்து கலைப்பணிபுரியும் ஏனையோரினதும் மனிதநேயம் தழுவிய கலைப்பற்றினை எடுத்துக் காட்டிநிற்கிறது. இத்தோடு 28 வருடங்களாகச் சிறுவர் நாடகத்துறையிலும் ஈடுபாட்டோடு உழைத்து வரும் இவர்கள் கடந்த 15

வருடங்களாக லண்டனில், 'நாடகப் பள்ளி' என்ற தூய தமிழ்ப் பெயரினைக் கொண்டதொரு அமைப்பினை உருவாக்கி வாரந்தோறும் நாடக வகுப்புக்களையும் நடத்திவருகிறார்கள். சந்ததிக் கையளிப்பாக தந்தையர், தம்மைந்தரையும் அரங்கக் கற்கையிலும் பணியிலும் ஈடுபடுத்தி வருகின்றனர். இப்பணிகளின் விளைவாக, புலம்பெயர் தமிழ்ச் சந்ததியினர் மத்தியில், தாய்மொழிப் பரிச்சயமும் பற்றும் மெல்லச் செறிந்து விடுகிறது. இதனால், வெற்று வெறிகலவாத மொழிப் பற்று, தயான்பினைப்போல அவர்களை ஆரத்தழுவிக்கொள்கிறது.

தொடர்ச்சி அறுபடாது 27 ஆண்டுகளாக லண்டனில் நாடக விழாக்களை நடத்தி வரும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் ஏனைய புலம்பெயர் நாடுகளிலும், நாடக மேடையேற்றங்களையும் நாடகப் பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் தமிழர் இருக்கும் நாடெலாம் சென்று கலைப்பணி ஆற்றிவரும் பாலேந்திரா ஆனந்தராணி தம்பதியினர் இருவரும் உலகளந்து நின்று கலைப்பணி புரிந்த பெருமையைப் பெறுகின்றனர். தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் பணி பல்லாண்டு பல்லாண்டு தொடர இறையருள் வேண்டி வாழ்த்துவதில் மனமகிழ்வெய்துகிறேன்.

வாழ்க பல்லாண்டு.

# தமிழ் நாடக உலகம் பெருமைகொள்கிறது.



**நவதர்ஷனி கருணாகரன்**

சிரேஸ்ட விரிவுரையாளர் நாடகமும் அரங்கக்கலைகளும்

நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

1970 களின் நடுப்பகுதியில் அவைக்காற்றுக்கழகம் யாழ்ப்பாணத்தில் திரு.க. பாலேந்திராவினால் ஸ்தாபிக்கப்பட்டது. அரங்கின் மீதான தன்னார்வத்தினால் தன்னைத்தானே செதுக்கிக்கொண்ட அரங்க நடிகர் நெறியாளர் தயாரிப்பாளர் விதானிப்பாளர் என்ற பல்துறை ஆற்றலும் கொண்ட அரங்கக்கலைஞர் அவர். தொழில்ரீதியாக பொறியியலாளராக இருப்பினும் ஒரு நாடகக்கலைஞராகவே எல்லோராலும் அறியப்பட்டவர்.

இலங்கையின் பலபாகங்களிலும் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்தினர். அரங்கில் மனமார்ந்த ஈடுபாடுடைய நண்பர்களின் கூட்டுழைப்பே அவைக்காற்றுக் கழகத்தின் செயற்பாடுகளிற்கு அச்சாணியாக இன்று வரை திகழ்கிறது. அவைக்காற்றுகைக் கழக நாடகங்களினால் தமிழ்மரபின் நவீன அரங்கவரலாறும் அதன் அழகியல் அனுபமும் புதியபரிமாணம் பெற்றுக் கொண்டது.

1980களின் ஆரம்பநாட்களில் நாட்டின் சீரற்ற நிலமைகளால் திரு.க.பாலேந்திரா அவர்கள் இங்கிலாந்திற்குப் புலம்பெயர்ந்து செல்லும்பொழுது அவைக்காற்றுக் கழகத்தினையும் தன்னுடன் காவிச் சென்றார். அன்னியசூழலில் நாளாந்த வாழ்க்கைப் போராட்டத்திற்கிடையிலும் புலம்பெயர் தேசங்களில் அரங்கத்தயாரிப்புகளில் ஈடுபடுவதன்மூலம் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தினர் ஒன்று கூடுவதற்கான களமாக்கியவர். நாடகப்பயிற்சிப் பட்டறைகள் மற்றும் இளையோருக்கான நாடகப் பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதன் மூலம் புலம்பெயர் சமூகங்களில் வாழும் இளையதலை முறையினருக்கு அரங்கவெளிப்பாடுகள் மூலமாக தமிழ்மொழி மற்றும் தமிழ்க்கலாசாரம் என்பனவற்றை அரங்கினூடாக அறியவைத்தார்.

திரு. க. பாலேந்திரா அவர்களின் நாற்பது ஆண்டுகால அரங்கப்பயணத்திற்கு திருமதி ஆனந்தராணி பாலேந்திரா அவர்களது கடின உழைப்பும் அவர் ஒரு அரங்கக்கலைஞராக இருந்தமையும் அவைக் காற்றுக்கழகத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு பெரும் உறுதுணையாக இருந்துவருகிறது.

அவைக்காற்றுக்கழகம் தொடர்பான வெளியீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய ஆவணங்களே காலங்கடந்தும் வரலாற்றினைக் கூறுபவை ஆகும் அவைக்காற்றுக்கழகத்தின் நாற்பது ஆண்டுகால பயணம் என்பது பலரது கடின உழைப்பினாலும் தியாகங்களினாலும் தன்முனைப்பினாலுமே சாத்தியமாகியது. அவைக் காற்றுக்கழகத்தின் நாற்பது ஆண்டு கால அரங்கப் பயணத்தின் மூலம் தமிழ்நாடக உலகம் பெருமைகொள்கிறது. தொடர்ந்தும் அவைக்காற்றுக் கழகத்தின் செற்பாடுகள் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

# உங்கள் பணி என்றென்றும் தொடரவேண்டும்...

**கே. எஸ். கருணா பிரசாத்**

மூன்றாம் அரங்கு, 12/293, அகமது வணிக வளாகம், தரைத்தளம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.

செல்பேசி: +91-9841450437 மின்னஞ்சல்:kskarunaprasad@gmail.com

உலகளவில் விரிந்து பரந்த புலம் பெயர் இனம் (Diaspora) என்று சொன்னால் ஈழத்து மக்களையும் குறிக்கும். அத்தகைய ஈழ மண்ணிலிருந்து தங்களை வேரோடு பிடுங்கி, சுற்றங்களை இழந்து, வலிகளையும் வேதனைகளையும் சுமந்து முகம் தெரியாத வேறொரு மண்ணில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு, புதிய வாழ்க்கையைத் தொடங்குவதென்பது மனிதகுல வரலாற்றின் உச்சபட்ச வேதனைகளில் ஒன்றாகும். அவ்வாறு இடம்பெயர்பவர்கள் தங்களைப் பற்றியும் தங்களது சுற்றத்தைப் பற்றியும் தங்களது எதிர்காலத்தைப் பற்றியும் மட்டுமே சிந்திக்கும் நிலைக்கு தள்ளப்படுவர். ஆனால் அந்த வலிகளோடும் வேதனைகளோடும் வாழ்க்கையில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள போராடிக்கொண்டே, தம் இனத்தின் அடையாளத்தை, கலையை வேறொரு மண்ணில் தொடருவது மிகவும் சவாலான ஒன்று. புலம் பெயருதல் என்பது புதிரான வாழ்க்கையைத் தொடங்குதல். மணமான பெண்ணுக்கு பிறந்தவீடு சொந்தமில்லை. புகுந்த வீடுதான் எல்லாம். அதைப்போலத்தான் புலம்பெயர் வாழ்வில் புலம்பெயர்ந்த மண்ணில் உழைத்து, களைத்து, ஓய்ந்து சற்றே இளைப்பாறுகையில் பிறந்த மண்ணின் நினைவுகள் நம்மை அலைகழிக்கும். சொந்த மண்ணைப் பிரிவதென்பது, உடலைவிட்டு உயிர் பிரிவதற்கு ஒப்பானது. ஆனால் அத்தனையும் தாண்டி வாழ்தல் தரும் நெருக்கடிகளுக்குள் உழன்றுகொண்டே தனது கலையை, கலாச்சாரத்தை உயிர்ப்போடு வைத்திருப்பது என்பது மிகவும் சிக்கலான ஒன்று.

அத்தகைய உயரிய பணியில் 1978 முதல் க. பாலேந்திரா தலைமையில் இயங்கி வரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் ஈடுபட்டு வருவதை எண்ணி பெருமை யடைகிறேன். 1976 முதல் 1982 வரை ஈழ மண்ணில் மழை, பலி, பசி, நட்சத்திரவாசி, கண்ணாடி வார்ப்புகள், யுகதர்மம் போன்ற காத்திரமான நாடக அளிக்கைகளை அளித்து வருபவர் க. பாலேந்திரா. பின்னர் கண்ணாடி வார்ப்புகள் நாடகம் அளித்த உத்வேகத்தில் 1978இல் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினை கலை ஆர்வலர்கள் மற்றும் நண்பர்களோடு தொடங்கி, பின்னர் புலம்பெயர்ந்து லண்டனில் காலூன்றிய நிலையிலும் நாடகக் கலைமீது கொண்ட தீராத மோகத்தால் இதுநாள் வரையிலும் தொடர்ந்து நாற்காலிக்காரர், ஒரு பாலை வீடு, முகமில்லாத மனிதர்கள், சுவரொட்டிகள்,



அரையும் குறையும், துக்ளக், எரிகின்ற எங்கள் தேசம், அவசரக்காரர்கள் அரசனின் புத்தாடை, பாடம், தப்பி வந்த தாடி ஆடு போன்ற குறிப்பிடும்படியான பல்வேறு நாடக அளிக்கைகளைத் தொடர்ந்து தமிழுலகுக்கு அளித்து வந்துள்ளதைப் பார்க்கும்போது பிரமிப்பே மிஞ்சுகிறது. தொடர்ந்த வாழ்க்கைப் போராட்டத்தினூடே நண்பர்களை இணைத்துக் கொண்டு, தனது துணைவியாரோடு 40 ஆண்டுகால நாடகப் பயணத்தை வெற்றிகரமாக தொடர்வது என்பது எளிதானதல்ல. அதுமட்டுமல்லாமல் புலம்பெயர் வாழ்க்கை ஏற்படுத்தும் பாதிப்புகளில் மிகவும் கொடுமையான விடயம் என்னவென்றால் அடுத்த தலைமுறையினர் தாய்மண்ணின் கலாச்சாரத்தை, மொழியை, கலையை மறந்து அந்தக் கண்ணியிலிருந்து, தொடர்ச்சியிலிருந்து தம்மை துண்டித்துக் கொண்டு முகமற்றவர்களாக, முகவரியற்றவர்களாக, அடையாளமற்றவர்களாக உருவாவதுதான் என்று நினைக்கிறேன். ஆக தமது தாய்மண்ணின் கலையை தான் மட்டும், தனது சமகாலத்தினர் மட்டும் தொடர்வது என்றில்லாமல் வருங்கால சந்ததியினரும் தொடர வேண்டும் என்கிற உயரிய நோக்கோடு கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டனில் முதன்முதலில் தமிழ் நாடகப் பள்ளியினை நிறுவி, அதன் வாயிலாக தமிழ் வளர்ப்பது மட்டுமல்லாது தமிழ்க் கலைகளையும் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் உயரிய பணியினை செய்துவருவதைப் பார்க்கும்போது 'மெல்லத் தமிழ் இனி சாகும்' என்ற கூற்று பொய்த்துப் போகும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

நான் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு நாடகம் செய் வதற்கும் வேறுநாட்டில் இருந்துகொண்டு தமிழ் நாடகத்தை செய்வதற்கும் பாரதூரமான இடைவெளி உண்டு. அதுமட்டுமல்லாமல் என் நினைவுக்கெட்டியவரை

இங்கு தமிழ்நாட்டில் ஈழமண்ணின் நாடகப் பனுவல்கள் மேடையேறியது என்பது மிகமிகக் குறைவு. ஆனால் பாலேந்திரா அவர்கள் லண்டனில் இருந்துகொண்டு தமிழ் நாட்டு நாடக ஆசிரியர்களின் பனுவல்களை நிகழ்த்தியுள்ளதைப் பார்க்கும்போது நாம் செய்யத் தவறியதை மிகவும் எளிதாக அவர் செய்துள்ளதை எண்ணி வெட்கப்படவைக்கிறது. ஏனெனில் பெயரளவுக்குத்தான் நாம் தொப்புள்கொடி உறவு என்று கூறிக்கொள்கிறோம் என்று நினைக்கத் தோன்றுகிறது. நாடகத் தளத்தில், நாடக அளிக்கைகளில் பரந்துபட்ட ஊடாட்டம் நிகழவில்லை என்றே எண்ணத் தோன்றகிறது. இங்கே இயங்கும் சிறந்த நாடகக் குழுக்கள்கூட (எமது மூன்றாம் அரங்கு நாடகக் குழு உள்பட) ஏன் ஈழமண்ணைச் சேர்ந்த நாடகாசிரியர்களின் நாடக ஆக்கங்களை மேடையேற்ற முன்வரவில்லை என்கிற குற்றவுணர்வும் கேள்வியும் எழுவதை தவிர்க்க இயலவில்லை. பாலேந்திரா அவர்களின் நாடகப் பள்ளியில் சிறுவர்களாக பங்கேற்றவர்கள் வளர்ந்து அவர்களது சந்ததியினரோடு இணைந்து நாடகப் பணியைத் தொடர்வதை எண்ணி பெருமைப்படுகிறேன். மரபின் தொடர்ச்சி அறுபடாமலிருப்பதையே இது காட்டுகிறது. இந்த தொடர்ச்சியானது என்றென்றும் தொடர வேண்டும் என்று மனமார வாழ்த்துவதோடு பாலேந்திரா, அவரது துணைவியார், மகள் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றும் அனைத்து நண்பர்களையும் நினைத்து பெருமிதம் கொள்கிறேன்.

லண்டன் Watersmeet Theatre அரங்கில் வருகின்ற செப்டம்பர் மாதம் 29ஆம் நாளன்று நிகழ இருக்கும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் 40ஆவது ஆண்டு விழாவும் லண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் 15ஆவது ஆண்டு விழாவும் மிகப்பெரிய வெற்றியடைய உளமார வாழ்த்துகிறேன்.

# 2015 நாடக விழா







# இலங்கையில் எமது நாடக மேடையேற்றங்கள்..

**பாலேந்திரா 1976 க்கு பின் நெறிப்படுத்திய நாடகங்களின் தொடர்ந்த நடவடிக்கைகள் மேடையேற்ற விபரங்கள்-மற்றும் சில பதிவுகள்.**

**(பதிவில் உள்ளவை மட்டும்)**

| | | |
|---|---|---|
| 27.10.76 | மழை | கொழும்பு லயனல் வென்ட் அரங்கு |
| 14.01.77 | மழை | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 22.01.77 | மழை | கொழும்பு லயனல் வென்ட் அரங்கு |
| 23.01.77 | மழை | பேராதனை பல்கலைக்கழகம் |
| 01.12.77 | நாடக பயிற்சிப் பட்டறை | கட்டுபெத்தை பல்கலைக்கழகம் |
| 08.01.78 | பலி - நட்சத்திரவாசி | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 09.01.78 | பலி - நட்சத்திரவாசி | திருகோணமலை இந்துக் கல்லூரி |
| 01.03.78 | நாடக பயிற்சிப் பட்டறை | வித்தியாலங்காரா பல்கலைக்கழகம் |
| 17.03.78 | பலி - நட்சத்திரவாசி | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 18.03.78 | பலி - நட்சத்திரவாசி | பேராதனை பல்கலைக்கழகம் |
| 25.03.78 | ஒரு யுகத்தின் விம்மல் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 09.06.78 | கண்ணாடி வார்ப்புகள் (பகல்-காட்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 09.06.78 | கண்ணாடி வார்ப்புகள் (மாலை-காட்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 18.06.78 | கண்ணாடி வார்ப்புகள் | பேராதனை பல்கலைக்கழகம் |
| 23.09.78 | மழை | இலங்கை வானொலி ஒலிபரப்பு |
| 27.12.78 | பசி - புதிய உலகம் பழைய இருவர் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 14.01.79 | பசி | திருகோணமலை இந்துக் கல்லூரி |
| 26.01.79 | கானசாகரம் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 03.02.79 | கண்ணாடி வார்ப்புகள் | கொழும்பு லயனல் வென்ட் அரங்கு |
| 18.02.79 | கண்ணாடி வார்ப்புகள் (சமர் சஞ்சிகை நிதியுதவி நிகழ்ச்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 04.03.79 | கண்ணாடி வார்ப்புகள் | கொழும்பு தமிழ் சங்கம் |
| 11.03.79 | பசி - புதிய உலகம் பழைய இருவர் | கொழும்பு லும்பினி அரங்கு |
| 12.03.79 | பசி - புதிய உலகம் பழைய இருவர் | பேராதனை பல்கலைக்கழகம் |
| 31.03.79 | ஒரு பாலை வீடு | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 21.04.79 | ஒரு பாலை வீடு | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 22.04.79 | கண்ணாடி வார்ப்புகள் (விமர்சனம்) இலங்கை வானொலி - | கலைக்கோலம் |
| 10.06.79 | மழை - இடைவெளி | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 12.07.79 | மழை | கொழும்புஇராமகிருஷ்ண மண்டபம் |
| 17.08.79 | கண்ணாடி வார்ப்புகள் (பகல்-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 17.08.79 | கண்ணாடி வார்ப்புகள் (மாலை-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 23.09.79 | கண்ணாடி வார்ப்புகள் | இலங்கை வானொலி ஒலிபரப்பு |
| 30.09.79 | கண்ணாடி வார்ப்புகள் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 06.10.79 | கண்ணாடி வார்ப்புகள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 21.10.79 | நாடக கருத்தரங்கு | யாழ். பல்கலைக்கழகம் |
| 25.10.79 | நாடக பயிற்சிப் பட்டறை | கட்டுபெத்தை பல்கலைக்கழகம் |
| 14.11.79 | நாடக கருத்தரங்கு | கட்டுபெத்தை பல்கலைக்கழகம் |
| 18.11.79 | மழை – பசி | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 25.11.79 | நாடக கருத்தரங்கு | கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் |
| 09.12.79 | யுகதர்மம் - நாற்காலிக்காரர் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 10.12.79 | விமர்சனக் கூட்டம் | யாழ்.பாரதி பாஷ்ய பாடசாலை |
| 06.01.80 | கண்ணாடி வார்ப்புகள் (பகல்-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 06.01.80 | கண்ணாடி வார்ப்புகள் (மாலை-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 18.01.80 | யுகதர்மம் - நாற்காலிக்காரர் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 19.01.80 | விமர்சனக் கூட்டம் | கொழும்பு கிறீன்லன்ட்ஸ் உணவகம் |
| 20.01.80 | யுகதர்மம் - நாற்காலிக்காரர் | பேராதனை பல்கலைக்கழகம் |
| 26.01.80 | யுகதர்மம் - நாற்காலிக்காரர் | கொழும்பு லும்பினி தியேட்டர் |
| 03.02.80 | யுகதர்மம் - நாற்காலிக்காரர் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 05.02.80 | விமர்சனக் கூட்டம் | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 10.02.80 | மழை - இடைவெளி | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 23.02.80 | ஒரு பாலை வீடு | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |

| | | |
|---|---|---|
| 25.02.80 | விமர்சனக் கூட்டம் | யாழ்.விஞ்ஞான கல்வி நிலையம் |
| 02.03.80 | ஒரு பாலை வீடு | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 03.03.80 | ஒரு பாலை வீடு (பகல்-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 03.03.80 | ஒரு பாலை வீடு (மாலை-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 04.03.80 | ஒரு பாலை வீடு | பேராதனை பல்கலைக்கழகம் |
| 02.04.80 | யுகதர்மம் (ஆறு நாடகங்கள் நூல் வெளியீட்டு விழா | கொழும்பு இராமகிருஷ்ண மண்டபம் |
| 10.04.80 | கண்ணாடி வார்ப்புகள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 14.04.80 | கண்ணாடி வார்ப்புகள் | அரியாலை திறந்தவெளி அரங்கு |
| 26.04.80 | கண்ணாடி வார்ப்புகள் | இலங்கை வானொலி-மறு ஒலிபரப்பு |
| 26.04.80 | மழை | பேராதனை பல்கலைக்கழகம் |
| 18.05.80 | பசி (ஒரு கூடைக் கொழுந்து நூல் வெளியீடு) | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 25.05.80 | முகமில்லாத மனிதர்கள் | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 31.05.80 | முகமில்லாத மனிதர்கள | யாழ்.நிம்மர் மண்டபம் |
| 24.06.80 | கண்ணாடி வார்ப்புகள் | இலங்கை வானொலி-மறு ஒலிபரப்பு |
| 05.07.80 | நாடக பயிற்சிப் பட்டறை | கொழும்பு மருத்துவக் கல்லூரி |
| 01.08.80 | சுவரொட்டிகள் - சம்பந்தம் | கொழும்பு இராமகிருஷ்ண மண்டபம் |
| 16.08.80 | சுவரொட்டிகள் - சம்பந்தம் | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 21.09.80 | யுகதர்மம் | வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 24.09.80 | யுகதர்மம் | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 24.09.80 | யுகதர்மம் | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 24.09.80 | யுகதர்மம் - சம்பந்தம் | அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையம் |
| 25.09.80 | யுகதர்மம் | யாழ். சென்ற்.பற்றிக்ஸ் கல்லூரி |
| 26.09.80 | யுகதர்மம் | பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரி |
| 26.09.80 | யுகதர்மம் | பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி |
| 26.09.80 | யுகதர்மம் | பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரி |
| 28.09.80 | யுகதர்மம் - சம்பந்தம் - நிதியுதவி நிகழ்ச்சி ('புதுசு' | தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி |
| 15.11.80 | யுகதர்மம் (பகல்-காட்சி) | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 15.11.80 | யுகதர்மம் (மாலை-காட்சி) | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 16.11.80 | யுகதர்மம் | மாத்தளை சென்ற்.தோமஸ் மகளிர் கல்லூரி |
| 20.11.80 | யுகதர்மம் - சம்பந்தம் (பகல்-காட்சி) | மட்டக்களப்பு நகர மண்டபம் |
| 20.11.80 | யுகதர்மம் - சம்பந்தம் (மாலை-காட்சி) | மட்டக்களப்பு நகர மண்டபம் |
| 05.12.80 | நாடகப் பயிற்சிப் பட்டறை | பேராதனை பல்கலைக்கழகம் |
| 22.12.80 | யுகதர்மம் | பண்டாரவளை நகர மண்டபம் |
| 28.12.80 | யுகதர்மம் | கொழும்பு |
| 14.01.81 | மழை | திருகோணமலை இந்துக் கல்லூரி |
| 31.01.81 | முகமில்லாத மனிதர்கள் - சம்பந்தம் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 01.02.81 | முகமில்லாத மனிதர்கள் | பராதனை பல்கலைக்கழகம் |
| 28.02.81 | கண்ணாடி வார்ப்புகள் | இலங்கை வானொலி-மறு ஒலிபரப்பு |
| 05.04.81 | மழை | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 10.04.81 | கண்ணாடி வார்ப்புகள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 14.04.81 | கண்ணாடி வார்ப்புகள் | அரியாலை சுதேசிய திருநாள் அரங்கு |
| 26.04.81 | அரையும் குறையும் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 19.05.81 | மழை | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 30.05.81 | யுகதர்மம் | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 06.06.81 | அரையும் குறையும் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 13.06.81 | முகமில்லாத மனிதர்கள் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 26.06.81 | முகமில்லாத மனிதர்கள் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 27.06.81 | அரையும் குறையும் | இலங்கை வானொலி ஒலிபரப்பு |
| 30.06.81 | நாடக பயிற்சிப் பட்டறை | கொழும்பு றோயல் கல்லூரி |
| 04.07.81 | அரையும் குறையும் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 01.08.81 | பலி - மூன்று பண்டிதர் | கொழும்பு நவரங்ககல மண்டபம் |
| 09.08.81 | அரையும் குறையும் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 27.09.81 | அரையும் குறையும் - (அபிவிருத்தி நோக்கு நிதியுதவி நிகழ்ச்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 28.11.81 | நர்த்தனக் கோலம் - கானசாகரம் - இடைவெளி | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 21.02.82 | முகமில்லாத மனிதர்கள் - காமன் கூத்து | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 21.02.82 | நர்த்தனக் கோலம் - கானசாகரம் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 26.02.82 | நாடக பயிற்சிப் பட்டறை | கொழும்பு சென்ற்.பீட்டேர்ஸ் கல்லூரி |
| 28.02.82 | கண்ணாடி வார்ப்புகள் | இலங்கை வானொலி-மறு ஒலிபரப்பு |
| 01.03.82 | நாடக பயிற்சிப் பட்டறை | மொரட்டுவ பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| 05.03.82 | மரபு | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 14.03.82 | யுகதர்மம் (நல்லிணக்க நாடக விழா) | திருகோணமலை நகர மண்டபம் |
| 18.03.82 | கண்ணாடி வார்ப்புகள் ரூபவாகினி ஒளிபரப்பு | (முதல் தமிழ் நாடகம்) |
| 16.05.82 | துக்ளக் (பகல்-காட்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 16.05.82 | துக்ளக் மாலை-காட்சி) | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| 30.05.82 | துக்ளக் (பகல்-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 30.05.82 | துக்ளக் (மாலை-காட்சி) | கொழும்பு கதிரேசன் மண்டபம் |
| 07.06.82 | துக்ளக் | பேராதனை பல்கலைக்கழகம் |
| 09.06.82 | விமர்சனக் கூட்டம் | கொழும்பு கிறீன்லன்ட்ஸ் உணவகம் |
| 20.06.82 | மரபு (ஒரு கோடை விடுமுறை நூல் வெளியீடு) | கொழும்பு சரஸ்வதி மண்டபம் |
| 26.06.82 | முகமில்லாத மனிதர்கள் | கொழும்பு கதிரேசன் மண்டபம் |

**"தொடர்ந்த மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப் படுத்தும்."**

## மீண்டும் இலங்கையில்..

| | | | |
|---|---|---|---|
| 30-07-2013 | நாடகக விழா | மகாஜனா | பாடம், சம்பந்தம் |
| | | | கண்ணாடி வார்ப்புக்கள், |
| 03-08-2013 | நாடக விழா: | யாழ் வீரசிங்கம் மண்டபம் | பாடம் |
| | | | கண்ணாடி வார்ப்புக்கள் |
| | | | சம்பந்தம் |
| | | | பிரத்தியேக காட்சி |
| 04-07- 2013 | நாடக விழா நாடகங்கள் | அரியாலை | பாடம் |
| | | | பிரத்தியேக காட்சி |
| 09-08- 2013: | நாடக விழா நாடகங்கள் | கொழும்பு தமிழ் சங்கம் | மழை |
| | | | பிரத்தியேக காட்சி |
| 30-05-2015 | | மட்டக்களப்பு | நெட்டை மரங்கள் |
| 27-09-2015 | | யாழ் இந்தக் கல்லூரி 125வது ஆண்டு விழா | நெட்டை மரங்கள் |
| 28-09-2015 | | யாழ் பல்கலை கழகம் கைலாசபதி அரங்கு | நெட்டை மரங்கள் |



யாழ் வீரசிங்கம் மண்டபம் - 2013

# நாற்பதாண்டு கால நற்பணி

**P. விக்னேஸ்வரன்** - அரங்கவியலாளர் - கனடா



ஈழத்தமிழர்கள் மத்தியில், அவர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் ஓர் அமைப்பு நாற்பதாண்டுகாலம் தொடர்ந்து இயங்குவதென்பது மிகவும் அரிதானது. அதிலும் குறிப்பாக, மேடை நாடகங்களுக்கான அமைப்பு ஒன்று இவ்வளவு காலம் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பது ஒரு சாதனைதான். வாழ்க்கைக்கான முன்னுரிமைப் பட்டியலில் இடம்பிடிக்கத் தகுதியற்ற ஒரு துறையாக நாடகத் துறையைக் கருதும் ஒரு சமூகத்தினரின் மத்தியில் நாடகத்துறைக்கான அமைப்பொன்றைத் தொடர்ந்து நடத்திவருபவர் உண்மையிலேயே அக்கலைமீது ஆழ்ந்த பற்றுக்கொண்டவராகத்தான் இருக்கமுடியுமென்பது எவராலும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய உண்மை. இலங்கை நாடகத்துறை வரலாற்றைப் பதிவுசெய்யும்போது கே. பாலேந்திரா அவர்கள் நாடகக் கலையில் காட்டும் அக்கறையும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் எவராலும் புறக்கணிக்க முடியாதது என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எனவே அவர் தமிழ் நாடகக் துறையில் முக்கியமான ஒருவராகிறார்.

தனது இளவயதுமுதலே கலைகளில் நாட்டம் கொண்டவராக நடனம், வானொலி, மேடை நாடகங்கள், சினிமா என்று தன் பங்களிப்பை வழங்கி பாலேந்திராவின் வாழ்க்கையிலும் அவரது நாடக முயற்சிகளிலும் இணைந்திருக்கும் ஆனந்தராணி பாலேந்திரா அவர்களின் தமிழ் நாடகத்துறைக்கான பங்களிப்பும் போற்றப்பட வேண்டியதே. இருவருமிணைந்து பங்குபற்றிய கண்ணாடி வார்ப்புகள் மேடையேறி நாற்பது வருடங்களாகின்றன. எனது இரசனைக்கமைவாக இலங்கையின் தமிழ் மேடைநாடக வரலாற்றில் கண்ணாடி வார்ப்புகளின் மேடையேற்றம் ஒரு முக்கிய நிகழ்வு என்பேன்.

சம்பவங்களைப் பின்னிப் புனையப்படும் கதைகளை மேடையேற்றிக்கொண்டிருந்த காலத்தில் கதா பாத்திரங் களின் மன உணர்வுகளை முன்னிலைப்படுத்தி நாடகமாக்கப்பட்ட கண்ணாடி வார்ப்புகள், வேற்றுக் கலாச்சாரம்கொண்ட பிறமொழி நாடகமாக இருந்த போதிலும் உணர்வுகள் உலகப் பொதுவானவை என்னும் உண்மையை தமிழ் நாடகப் பார்வையாளர்களுக்கு உணர்த் தியது. அதன் மொழி பெயர்ப்பும் நாடக உரையாடல் நடையும் எமக்கு மிக நெருக்கமாக இருந்ததால் அது ஒரு முக்கிய தமிழ் நாடகமாக வரலாற்றில் இடம் பிடிக்கிறது.

கண்ணாடி வார்ப்புகள் நாடகம் தமிழ் மக்களிடையே பெற்ற வரவேற்புத் தந்த உற்சாக உந்துதலில் பாலேந்திரா அவர்கள் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தைத் தோற்றுவித்து, எத்தகைய சூழ்நிலையிலும் சலிப்படையாது, சோர்வடையாது, உயிர்ப்புள்ள ஓர் இயக்கமாக அதை இயக்கிக் கொண்டிருக்கிறார். துணையாக ஆனந்தராணி அவர்களும். புலம்பெயர்ந்து வாழும் தேசமொன்றில் இத்தகய சேவைகளைப்புரிவது இலகுவானதல்ல. இருப்பினும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் இதுவரை தயாரித்து மேடையேற்றிய நாடகங் களின் பட்டியல் மிக நீளமானது. எனக்குத் தெரிந்து எந்தவொரு தமிழ் அமைப்பும் இத்தனை எண்ணிக்கையான நாடகங்களை மேடை யேற்றவில்லையென்று கூறுவேன். மேலும் எமது இளம் சமூகத்தினரை நாடகக்கலையில் ஈடுபடுத்தும் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் முயற்சி தூரநோக்குடைய ஒரு மிக முக்கியமான செயற்பாடு. அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் வெற்றிக்குப் பலர் பங்களிப்புச் செய்திருந்தாலும் பாலேந்திரா அவர்களும் அவரது துணைவியாருமே அச்சாணிகள்.

கண்ணாடி வார்ப்பு நாடகமும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகமும் நாற்பது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில் அவர்களின் செயற்பாடுகளை ஆரம்பகாலம்முதலே அவதானித்து வருபவன் என்ற வகையில் எனது பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். கே. பாலேந்திரா அவர்களும் ஆனந்தராணி பாலேந்திரா அவர்களும் தமிழ் நாடகத்துறையின் வளர்ச்சிக்கு மேலும் பல ஆண்டுகள் உழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

# உலக நாடுகளில் எமது நாடகங்கள்

## நெதர்லாந்து

| | | |
|---|---|---|
| 08.08.1993 | Utrecht Holland | மழை, எரிகின்ற எங்கள் தேசம் |
| 18.01.1997 | லிம்பேர்க் தமிழ்மன்றம் விழா பிரத்தியேகக்காட்சி | |
| | Oss Kooer, ittard, Holland. | ஆற்றைக்கடத்தல் |
| 21.05.2016 | Denheler, | பாடம் |

## சுவிற்சர்லாந்து

| | | |
|---|---|---|
| 02.04.1994 | நாடகவிழா | மழை, பசி |
| | Hotel Limmot, Zurich, Switzerland | பாரதத்தர்மம், இருதுயரங்கள், சம்பந்தம; |
| 03.04.1994 | நாடகவிழா | மன்னிக்கவும், சம்பந்தம், கானசாகரம் |
| | Stadt Casino,Basel, Switzerland | போகிறவழிக்கு ஒன்று, பாரதத்தர்மம் |
| 04.04.1994 | நாடகவிழா | எரிகின்ற எங்கள் தேசம், |
| | | போகிற வழிக்கு ஒன்று |
| | Maooamondo, Bern, Switzerland | மழை, ஐயா இலெக்□ன் கேட்கிறார் |
| 08.04.1994 | நாடகவிழா | மன்னிக்கவும், ஐயா இலெக்□ன் கேட்கிறார் |
| | Volkshous, Zurich, Switzerland | போகிற வழிக்கு ஒன்று, கானசாகரம் |
| 09.04.1994 | நாடகவிழா | பசி, மன்னிக்கவும், எரிகின்ற எங்கள் தேசம் |
| | Hotel Ekkehard, St. Gallen, Switzerland | இரு துயரங்கள் சம்பந்தம், |

## பிரான்ஸ் பாரிஸ்

| | | |
|---|---|---|
| 11.03.1995 | நாடகவிழா | யுகதர்மம், கானசாகரம் |
| | Musse National Des Arts Asratiauss | மழை |
| | Paris France | சம்பந்தம் |
| 12.03.1995 | நாடகவிழா | பாரதத்தர்மம் |
| | Musse National Des Arts Asratiauss | போகிற வழிக்கு ஒன்று |
| | Paris France | மன்னிக்கவும், முகமில்லாத மனிதர்கள் |
| 29.09.2016 | பிரான்சு பாரிஸ் உலக நாடக விழா | பாடம் |
| 23.10.2016 | மகாஜனா பாரிஸ் வெள்ளி விழா | சம்பந்தம் |
| | Espace Associotif | |
| 11.06.2018 | Place de Torcy | அவசரக்காரர்கள் |

## நோர்வே

| | | |
|---|---|---|
| 16.04.1995 | நாடகவிழா | மழை, பசி |
| | Sentrum Kino, Oslo, | மன்னிக்கவும், சம்பந்தம், பாரதத்தர்மம் |
| 17.04.1995 | Ortun Skole | மழை |
| | Bergen - | மன்னிக்கவும், பாரதத்தர்மம் |
| 17.08.1996 | நோர்வே தமிழ்ச்சங்கம் | துன்பக்கேணியிலே |
| | Sampunn Huset, Oslo | இடைவெளி |
| 28.08.1999 | நோர்வே தமிழ் சங்க கலை விழா | பெயர்வு |
| | Oslo | கண்ணாடி வார்ப்புகள் |

## ஜேர்மனி

| | | |
|---|---|---|
| 19.07.2003 | நாடக விழா – | கண்ணாடி வார்ப்புகள் |
| | St. Albertus Magnus Church Hall, Germany | சம்பந்தம், வேருக்குள் பெய்யும் மழை |

### அவுஸ்திரேலியா

| | | |
|---|---|---|
| 26.04.1996 | நாடகவிழா<br>Ryde Civic Hall<br>Sydney, Australia. | மழை, மன்னிக்கவும்<br>சம்பந்தம், பாரததர்மம்<br>துன்பக்கேணியிலே |
| 27.04.1996 | நாடகவிழா<br>Brisbane, Australia. | மழை, மன்னிக்கவும்<br>சம்பந்தம், பாரததர்மம், துன்பக்கேணியிலே |
| 28.04.1996 | நாடகவிழா<br>St. Marys Community Hall<br>Melbourne, Australia. | மழை, பிரத்தியேகக்காட்சி<br>பாரததர்மம், சம்பந்தம்<br>இரு துயரங்கள் |
| 04.05.1996 | மெல்பன் கலைவட்டம்<br>Clartndo Community Hall<br>Melbourne, Australia. | பசி |

### கனடா

| | | |
|---|---|---|
| 27.08.1994 | நாடக விழா<br>Brocton High School<br>Toronto, Canada | மன்னிக்கவும்<br>சம்பந்தம்<br>பசி, மழை |
| 24.05.1997 | அரங்காடல் நாடக விழா<br>Birchmound Park Ct<br>Toronto, Canada | முகமில்லாத மனிதர்கள்<br>துன்பக் கேணியிலே<br>மன்னிக்கவும். ஆற்றைக் கடத்தல் |
| 21.10.2000 | நாடக விழா<br>Winston Churchill Collegeate<br>Auditorium, Scarborugh, Canada | <br>கண்ணாடி வார்ப்புக்கள்<br>யுகதர்மம், பெயர்வு |
| 28.10.2000 | Scarborugh, Canada | சம்பந்தம் |
| 12.09.2015 | Yorkwood Theatre, Toronto, Canada | மரணத்துள் வாழ்வு |

### இந்தியா

| | | |
|---|---|---|
| 22-07-2010 | சென்னை நாடக விழா<br>ஸ்பேசஸ் பெசன்ட் நகர், சென்னை | மழை<br>பிரத்தியேக காட்சி |

# தமிழ் நாடகத் துறையின் நெருக்கடி

பேராசிரியர் சி. சிவசேகரம்

1950களின் முற்பகுதி வரையேனும் இலங்கை-இந்தியப் பண்பாட்டுப் பரிமாற்றத்தில், தமிழரிடை இந்திய ஆதிக்கம் வலுவாயிருந்தது. இரு நாடுகட்கும் தமிழ் ஒரு "பொது மொழியாக" இருந்தமையும் அதற்குதவியது. அதைவிட, இந்தியாவைத் "தாய்நாடு" என்றும் "தொப்புள் கொடியுறவு" என்றும் கொண்டாடல் இலங்கைத் தமிழ்த் தேசியத்தில் வலுவாயிருந்தது.

1950களில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஓங்கிய பண்பாட்டு எழுச்சியையொட்டித் தென்னாசியக் கலை இலக்கியத் துறைகளில் தேசியப் பண்பாடு வலிதாக முத்திரை பதித்தது. எனினும், இலங்கைத் தமிழ்க் கலை-இலக்கியத் துறைகள் பல கணிசமாக இந்திய நிழலில் வளர்ந்ததன் பயனான தேக்கத்தை உடைக்கக் காலமெடுத்தது. முற்போக்கு இலக்கிய இயக்கம் தேசிய இலக்கியக் கோட்பாட்டை முன்னெடுத்த பின்பே ஈழத்துப் படைப்பிலக்கியம் தன் மண்ணின் அடையாளத்தை உறுதியாக நிறுவியது. 1960களின் முற்கூற்றில், தமிழ்த் தேசியவாதிகளின் எதிர்ப்பை மீறி இடதுசாரிகளின் ஆதரவுடன், இலங்கை அரசாங்கம் இந்திய வணிகநோக்குத் தமிழ்ச் சஞ்சிகைகள்' மீதும் சினிமா மீதும் விதித்த இறக்குமதிக் கட்டுப்பாடு ஈழத் தமிழ்ச் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கும் ஆக்க இலக்கிய எழுச்சிக்கும் மிக உதவியது. எனினும் இலங்கைத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி மட்டுப்பட்டே இருந்தது. இந்திய வணிகநோக்குச் சினிமாப் படங்களின் இறக்குமதிக் கட்டுப்பாடும் இலங்கைத் தமிழ் சினிமாவுக்குச் சிறிதளவே உதவியது. இவை மக்களின் பரவலான நுகர்வுக்குரிய நவீன கலைகளின் விருத்திக்குப் பொருளாதாரப் பரிமாணத்தின் முக்கியத்தைக்

கூறுவன. அத்துடன் இந்தியப் பொழுதுபோக்குத் துறையின் வணிக நோக்கு இலங்கைக்கு வெளியே இருந்த பெரிய சந்தையான தமிழ்நாட்டை ஈழத்து நூல்களும் சினிமாவும் அடையத் தடையானது. சிங்கள சினிமாவும் நவீன நாடகத் துறையும் அயற் செல்வாக்கினின்று விடுபட்டுச் செழித்தளவுக்குத் தமிழ் இசைத் துறையும் மேடை நாடகமும் சினிமாவும் செழிக்க இயலாமைக்குப் பொருளாதாரக் காரணங்கள் வலியன.

இலங்கைத் தமிழ் நாடகத் துறையில் முதலில் தமிழ்நாட்டுக் கூத்து மரபின் தாக்கமும் வடக்கிலிருந்து தமிழ்நாட்டை அடைந்த நவீன நாடகத்தினதும் அதன் தாக்கத்துக்குட்பட்ட தமிழ் சினிமாவின் தாக்கமும் வலியன. இலங்கைத் தமிழ்க் கூத்துகட்கு ஊரும் பிரதேசமும் சார்ந்த அடையாளங்கள் உருவாகி நிலைபெற்றன. ஆனால் ஈழத் தமிழ் மேடை நாடகங்கள் இந்திய தமிழ் சினிமாவினதும் நகர்சார் நாடகத்தினதும் தாக்கத்தை மீறிய கலைவடிவமாகக் காலமெடுத்தது. பல்கலைக் கழகங்களை மையப்படுத்திய நாடக முயற்சிகள் முக்கிய பங்களிப்புகளை வழங்கிய போதும் ஒரு நல்ல நாடக மரபை உருவாக்க அது போதாது என்பதை 1970களில் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் நாடக விழாக்களில் மேடையேறிய கீழ்த்தரமான நாடகங்களின் ஒரு சான்றெனபேன். விலக்காக நல்ல நாடகங்கள் சில மேடையேறியதைக் கூற வேண்டும்.

மெச்சத்தக்க முயற்சிகள் வெவ்வேறு தளங்களில் நடந்தன. சமூக நீதிப் போராட்டங்களைச் சார்ந்து 1960களின் பிற்கூற்றில் எழுந்த நாடகங்களைக் குறிப்பிடலாம். அவற்றைவிட, 1960களில் தொடங்கிச் சமூகப் பிரச்சனைகள் சார்ந்த நாடக முயற்சிகள் 1970களிலும் தொடர்ந்தன. தரமான நாடகச் சுவடிகள் பல உருவான காலமென அக் காலத்தைக் கூறலாம். சுவடிகளுட் கணிசமானவை மேடையேறின. அத்துடன், தரமான வானொலி நாடகங்கள் பல ஒலிபரப்பாயின. எனினும் தமிழ் நாடகத் துறையின் பரப்பு மேலும் விரிவாக்கத்தை வேண்டியது.

அவ் வகையில் பாலேந்திராவின் வழிகாட்டலில் அவைக்காற்றுக் கலைக்கழகம் குறைந்த வளங்களுடன் தமது உழைப்பே மூலதனமாகத் தயாரித்த நாடகங்கள் புதிய பரிமாணங்களைத் தொட்டளவில் முக்கிய பங்களிப்புகள். அவற்றுட் பெரும்பாலானவை மொழிபெயர்ப்புகள் என்பது சர்ச்சைக்கு இடமளித்தபோதும் அம் முரண்கள் அவைக்காற்றுக் கலைக்கழகச் செயற்பாட்டைச் சொல்லுமளவுக்குப் பாதிக்கவில்லை என நம்புகிறேன். ஒரு நாடக ரசிகர் வட்டத்தை உருவாக்கி விரித்தமை அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் மெச்சத்தக்க பங்களிப்பு என்பேன்.

1983ம் ஆண்டின் வன்முறை மட்டுமன்றி 1980களில் வலுக்கத் தொடங்கிய அரச ஒடுக்குமுறையும் அதற்குச் சளையாத இயக்க அடாவடித்தனங்களும் வடக்கிலும் கிழக்கிலும் கலை இலக்கியச் செயற்பாடுகளை முடக்கின. 1990களிலும் பின்பும் கொழும்பை மையமாகக் கொண்ட நாடக முயற்சிகள் தொடர்ந்தாலும் அவை ஒரு நாடக இயக்கமாக வளரவில்லை. பின்னர் வடக்கின் உடனடிச் சூழல் சார்ந்து கனதியான நாடகங்கள் வந்தன. சில நாட்டின் பிற பகுதிகளிலும் பன்முறை மேடையேறின.

இடர்ச் சூழலிற் தரமான நாடக முயற்சிகள் இயலுமான ஒரு மண்ணில் ஏன் போருக்குப் பிந்திய சூழலில் நாடகத் துறை வளரத் தவறியது என்பது முக்கிய கேள்வி.

நாடகத் துறையினர் பலர் புலம்பெயர்ந்த போதும் நாடகம் என்பது புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் முக்கிய பண்பாட்டுக் கூறெனச் சொல்வது கடினம். இதனிடையே மூன்று தசாப்தங்கட்கு மேல் அவைக்காற்றுக் கலைக்கழகம் மெச்சத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது. புலம்பெயர் நாடகச் செயற்பாடுகள் இன்னமும் உயிரோடிருப்பதில் அதன் பங்கு பெரிது.

எனினும், சமகாலத் தமிழ் நாடகத் துறையின் சவால்கள் பெரியன. பொழுதுபோக்கு என்றளவில் மனித மூளைக்குச் சவால்விடாத காட்சி வினோதங்களும் சிந்தனைச் சோம்பலுக்குத் தீனியிடும் திரை நாடகங்களும் நாடகங்களின் வெளியைக் கரைக்கின்றன. வலிய நாடக மரபொன்றைக் கட்டியெழுப்பும் பணி எளிதல்ல. அதற்கு முக்கியமாகப் பண்பாட்டு விழிப்புத் தேவை. ஒரு சமூக நிகழ்வாகச் சமூகத்தையொட்டி வளர்வதன் மூலமே நாடகம் சமூகத்தின் பண்பாட்டுக் கூறாக நிலைக்கும்.

அவைக்காற்றுக் கலைக் கழகம் நாடக ஆர்வத்தை அடுத்த தலைமுறைக்குக் கைமாற்ற மிக முயல்கிறது. அது வரவேற்கத் தக்கது. ஆயினும் தமிழ்ச் சமூகத்தின், குறிப்பாகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின், பண்பாட்டு அடையாள நெருக்கடியையும் விளிப்பதன் மூலமே அடுத்த தலைமுறை நாடகத் துறையின் சவால்கட்கு முகங்கொடுக்கும்.

எவ்வாறாயினும் அவைக்காற்றுக் கலைக் கழகம் தனது கலைப் பயணத்தை விடாது தொடர்வதையிட்டு எனது மகிழ்ச்சியையும் அந்த ஊக்கம் தளர்வின்றி மேலும் தொடர என் வாழ்த்துகளையும் இவ்வேளை கூற விரும்புகிறேன்.

# நாடக விழா நிகழ்ச்சிகள்

## 1. அமைதிப்பூங்கா – Amaithi Poonga

Play by the students of London Tamil Drama School

| | | |
|---|---|---|
| Script: | Johnson Rajkumar | |
| Narrators: | Ansa Annadurai | Athista Sabesan |
| | Aijay Annadurai | Sreya Raviharan |
| | Keerthiga Ponampalam | Annai Karunakaran |
| | Avinesh Amirtharajan | |
| Lion: | Maravan Karunakaran | |
| Monkey: | Thanuja Shanmugalingam | |
| Elephant: | Kasturi Nirmalan | |
| Fox: | Maasilan Karunakaran | |
| Bear: | Vignesh Nirmalan | |
| Deer: | Ansa Annadurai | |
| Fawn: | Annai Karunakaran | |
| Crows: | Aijay Annadurai | Avinesh Amirtharajan |
| | Sreya Raviharan | |
| Cockerels: | Athista Sabesan | Daarshini Surendra |
| | Sachin Raviharan | Sanjay Raviharan |
| Keyboard: | Darshini Kangainathan | |
| Percussion: | Sanjuran Keerthikumar | |
| Singers: | Anandarani Balendra | Dharshini Sivasuthan |
| | Vijayakumari Paramakumaran | |
| Costumes: | Sumathy Tharmendra | |
| | Sampson Thiruchelvan | |
| Assistant Direction: | Anandarani Balendra | |
| Direction: | K. Balendra | |

## 2. அது – Athu

Play by the Senior Students of the London Tamil Drama School

| | | |
|---|---|---|
| Script: | Shanthosh Ananthan | Maanasi Balendra |
| | Sinthu Ananthan | |
| Actors: | Aathishankar Thayanantha | Lukciya Robinson |
| | Selvi Satkunananthan | Sinthu Ananthan |
| | Sharushan Vasudevan | Maanasi Balendra |
| | | Ramkeeran Sivasubramaniam |
| Direction: | Maanasi Balendra | |

## 3. கண்ணாடி வார்ப்புகள் - Kannaadi Varpuhal

'The Glass Menagerie' by Tennessee Williams

| | |
|---|---|
| Translation: | Balendra, Nirmala,Mallika |
| Tom: | Jenuson Robinson |
| Laura: | Saritha Annadurai |
| Amanda: | Anandarani Balendra |
| Jim: | Shanthosh Ananthan |
| Set: | Sampson Thiruchelvam |
| Costumes: | Saritha Annadurai |
| Music management | K Surendra |
| Assistant Direction: | Anandarani Balendra |
| Direction: | K. Balendra |

## 4. நீண்ட ஒரு பயணத்தில் - A Long Journey

A compilation of selected plays directed by K. Balendra

Narrator: Sampson Thiruchelvan

| | | | |
|---|---|---|---|
| On stage: | Mano Manuelpillai | K.Balendra | M. Sathiyamoorthy |
| | S. Vasudevan | Anandarani Balendra | S. Ganeshalingam |
| | Dharshini Sivasuthan | T. Yashoman | K. Ramesh |
| | V. Sivasuthan | S. Cumaraguru | S. Sanjeevraj |
| | Vijayakumari Para | Shanthosh Ananthan | Sinthu Ananthan |
| | Selvi Satkunananthan | Maanasi Balendra | |
| | Aathishankar Thayanantha | Lukciya Robinson | |
| | Sharushan Vasudevan | Saritha Annadurai | Ramkeeran Siva |
| | Jenuson Robinson | Hindusha Keerthikumar | |

| | |
|---|---|
| Comperes : | S K Rajen & Dharshini Sivasuthan |
| Back Stage | |
| Direction : | K. Balendra |
| Costumes : | Sumathi Tharmendra (Amaithi Poonga) |
| Make up : | Tamil Performing Arts Society |
| Sound and Lights: | V. Sivasuthan and AGS Production |
| Management: | Newton Gerard Iynkaran, Paramakumaran, Sivasubramaniam, Mala Sivasubramaniam, Surendra, Vanaja Keerthikumar, Komathy Surendra, Magalie Varathan, Thiban Varathan, Anusha Jothibal, Annadurai, Raviharan, Nirmalan, Karunakaran, Amirtharajan, Shanmugalingam, Paskaran |
| Video& photos : | Bobby |
| Media support: | Puthinam,Virakesai,& Thinakural |

# இன்றைய மேடைக் கலைஞர்கள்..


K. Balendra


Anandarani Balendra


M. Sathiyamoorthy


Mano Manuelpillai


S. Vasudevan


Dharshini Sivasuthan


V. Sivasuthan


Ramesh Kanthasamy


Vijayakumari Para


S. Sanjeevraj


S. Cumaraguru



S. Kanesalingam


T. Yashoman


T. Sampson


S.K. Rajen

# இன்றைய மேடைக் கலைஞர்கள்..



Saritha Annadurai



Maanasi Balendra



Shanthosh Ananthan



Sinthu Ananthan



Selvi Satkunananthan



Hindusha Keerthikumar



Lukciya Robinson



Jenuson Robinson



Sharushan Vasudevan



Aathishankar Thayanantha



Ramkeeran Sivasubramaniam



Sanjuran Keerthikumar



Darshini Kangainathan

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
□அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்“ எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
“அனுபவம் என்பதே நான்தான்“ என்றான்!

- **கவிஞர் கண்ணதாசன்**

**வாழ்த்துக்களுடன்**


Ratna & Co. Solicitors
Est. Since 1989

**169 a High St North, East-Ham, London E6 1JB**
**Tel: 0208-470-8818, Fax: 0208-475-0131, Mob: 07769 748409**
**Email: ratna@ratna.co.uk Web: www.ratna.co.uk**

*With best wishes*
from
**Ratna & Co Solicitors**

# எமது லண்டன் மேடையேற்றங்கள்....

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 09.11.85 | Willesden | மழை, பார்வையாளர்கள் |
| 15.03.86 | Acton | மழை, பார்வையாளர்கள் |
| 02.04.86 | Willesden | மழை, பார்வையாளர்கள் |
| 12.04.86 | Wimbledon | மழை, பார்வையாளர்கள் |
| 22.04.86 | Holborn | பார்வையாளர்கள் |
| 08.05.86 | Kensington | பார்வையாளர்கள் |
| 30.08.96 | Willesden | பசி, கவிதா நிகழ்வு |
| 02.10.86 | Neasden | பசி |
| 10.01.87 | Acton | கவிதா நிகழ்வு, கானசாகரம் |
| 25.04.87 | Alperton | கவிதாநிகழ்வு |
| 13.05.87 | Kensington | எரிகின்ற எங்கள் தேசம் |
| 20.06.87 | Swiss Cottage | கவிதா நிகழ்வு |
| 01.10.88 | Kensington | யுகதர்மம், சம்பந்தம் |
| 26.11.88 | Acton | யுகதர்மம், சம்பந்தம் |
| 14.01.89 | East Ham | யுகதர்மம், சம்பந்தம் |
| 25.11.89 | Wembley | முகமில்லாத மனிதர்கள் |
| 02.12.89 | Tooting | முகமில்லாத மனிதர்கள் |
| 03.12.89 | Walthamstow | முகமில்லாத மனிதர்கள் |
| 09.12.89 | Wimbledon | முகமில்லாத மனிதர்கள் |
| 06.01.90 | East Ham | முகமில்லாத மனிதர்கள் |
| 13.01.90 | Lewishiam | முகமில்லாத மனிதர்கள் |
| 25.03.90 | Willesden | யுகதர்மம், பலி |
| 09.06.90 | Tooting | இடைவெளி |
| 04.08.90 | Camden | எரிகின்ற எங்கள் தேசம் |
| 09.09.90 | Willesden | எரிகின்ற எங்கள் தேசம் |
| 27.10.90 | Neasden | எரிகின்ற எங்கள் தேசம் |
| 08.12.90 | Lewisham | எரிகின்ற எங்கள் தேசம், சம்பந்தம் |
| 20.04.91 | Alperton | எரிகின்ற எங்கள் தேசம், வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| 12.05.91 | Chingford | எரிகின்ற எங்கள் தேசம், வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| 22.06.91 | Walthamstow | எரிகின்ற எங்கள் தேசம், பாரததர்மம், வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள், சம்பந்தம், அபசுரம் |

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 21.07.91 | Willesden | மன்னிக்கவும்: பிரத்தியேகக் காட்சி, தரிசனம் |
| 19.10.91 | Alperton | சம்பந்தம் |
| 02.11.91 | Alperton | பாரததர்மம் |
| 16.11.91 | Walthamstow | மன்னிக்கவும், கானசாகரம் |
| 28.12.91 | Wimbledon | சம்பந்தம் |
| 21.02.92 | Camden | எரிகின்ற எங்கள் தேசம் |
| 21.03.92 | Walthamstow | சம்பந்தம், பாரததர்மம் |
| 25.04.92 | Alperton | தப்பி வந்த தாடி ஆடு |
| 24.05.92 | Wimbledon | எரிகின்ற எங்கள் தேசம், தப்பிவந்த தாடி ஆடு பிரத்தியேகக்காட்சி, தரிசனம் |
| 19.07.92 | Walthamstow, | தப்பிவந்த தாடி ஆடு, இடைவெளி, மழை துன்பக்கேணியிலே |
| 06.03.93 | East Ham | மழை |
| 17.04.93 | Alperton | நம்மைப்பிடித்த பிசாசுகள் |
| 09.05.93 | Tooting | மழை |
| 30.05.93 | Walthamstow | நம்மைப்பிடித்த பிசாசுகள், மன்னிக்கவும் |
| 19.06.93 | South Norwood | பாரத தர்மம், நம்மைப்பிடித்த பிசாசுகள், மழை |
| 04.09.93 | Walthamstow | திக்குத் தெரியாத காட்டில், இரு துயரங்கள் பசி, துன்பக் கேணியிலே |
| 20.04.96 | Wembley | மலைகளை அகற்றிய மூடக்கிழவன் |
| 16.04.97 | Uxbridge. | எப்போ வருவாரோ |
| 28.09.97 | Acton | அயலார் தீர்ப்பு |
| 08.11.97 | Ruislip | மலைகளை அகற்றிய மூடக்கிழவன் அயலார் தீர்ப்பு எப்போ வருவாரோ, ஆற்றைக் கடத்தல் அவசரக்காரர்கள் |
| 15.11.97 | Walthamstow | அயலார் தீர்ப்பு, மலைகளை அகற்றிய மூடக்கிழவன் எப்போ வருவாரோ ஆற்றைக்கடத்தல் அவசரக்காரர்கள் |

# Rasiah & Co
## Solicitors

- Commercial Conveyancing
- Residential Conveyancing
- Landlord & Tenant
- Immigration
- Matrimonial

**Tel: 020 8543 4040**
**Fax: 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW19 1AY

DX: 300004 Wimbledon South

info@rasiah.co.uk




# எமது லண்டன் மேடையேற்றங்கள் – தொடர்

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 30.11.1997 | Ealing | மெய்ச்சுடரே கூடி<br>கவிதை நாடக நிகழ்வு |
| 03.01.1998 | Greenford | அயலார் தீர்ப்பு<br>நர்த்தனக்கோலம் |
| 21.11.1998 | Kensington | அயலார் தீர்ப்பு<br>எப்போ வருவாரோ, பெயர்வு<br>மழை |
| 05.12.1998 | Acton | பெயர்வு கூடி |
| 12.12.1998 | Wimbledon | ஒரு பயணத்தின் கதை<br>எப்போ வருவாரோ, பெயர்வு<br>பிரத்தியேகக்காட்சி<br>போகிற வழிக்கு ஒன்று |
| 24.04.1999 | Wembley | பரமார்த்த குருவும் சீடர்களும் |
| 01.05.1999 | Greenford | அயலார் தீர்ப்பு<br>பரமார்த்த குருவும் சீடர்களும்<br>ஒரு பயணத்தின் கதை |
| 08.05.1999 | Acton | ஒரு பயணத்தின் கதை |
| 22.05.1999 | Walthastow | பரமார்த்த குருவும் சீடர்களும் |
| 18.09.1999 | Sutton | கண்ணாடி வார்ப்புகள்<br>பரமார்த்த குருவும் சீடர்களும்<br>பெயர்வு |
| 06.11.1999 | Ruislip | சம்பந்தம், மழை<br>பிரத்தியேகக்காட்சி |
| 21.11.1999 | Kingston | கண்ணாடி வார்ப்புகள் |
| 15.04.2000 | Wembley | வேடரை உச்சிய<br>வெள்ளைப் புறாக்கள் |
| 05.08.2000 | Ruislip | வேடரை உச்சிய<br>வெள்ளைப் புறாக்கள் |
| 24.02.2000 | Hounslow | கண்ணாடி வார்ப்புகள்<br>பார்வைக் கோளாறு<br>வேடரை உச்சிய<br>வெள்ளைப் புறாக்கள் |
| 21.04.2001 | Wembley | ஒரு பயணத்தின் கதை |
| 05.05.2001 | Kelsey | கண்ணாடி வார்ப்புகள்<br>இ |
| 22.07.2001 | Hayes | மழை |
| 13.10.2001 | Sutton | காத்திருப்பு, மழை<br>வேடரை உச்சிய<br>வெள்ளைப் புறாக்கள் |
| 06.04.2002 | Tooting | காத்திருப்பு |
| 05.05.2002 | Lewisham | கண்ணாடி வார்ப்புகள்<br>பிரத்தியேகக் காட்சி |
| 13.07.2002 | Woodfordgreen | பிரத்தியேகக் காட்சி |

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 13.08.2002 | Hayes | வேருக்குள் பெய்யும் மழை<br>காத்திருப்பு |
| 08.02.2003 | Walthamstow | காத்திருப்பு<br>கண்ணாடி வார்ப்புகள்<br>வேருக்குள் பெய்யும் மழை |
| 05.07.2003 | Wembley | வேருக்குள் பெய்யும் மழை |
| 06.07.2003 | Hayes | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு<br>வேருக்குள் பெய்யும் மழை |
| 02.08.2003 | Hayes | கண்ணாடி வார்ப்புகள் |
| 22.11.2003 | Wimbledon | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு<br>வேருக்குள் பெய்யும் மழை<br>அவன், அவள்<br>திக்கற்ற ஓலம், கானசாகரம் |
| 31.01.2004 | Tooting | சம்பந்தம் |
| 27.03.2004 | Wembley | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு |
| 10.04.2004 | Hounslow | வேருக்குள் பெய்யும் மழை |
| 17.04.2004 | Wembley | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு |
| 29.05.2004 | Wembley | சம்பந்தம் |
| 04.07.2004 | Ilford | பெருங்கதையாடல் |
| 17.07.2004 | Ruislip | அவசரக்காரர்கள்,<br>அவன், அவள்<br>வேருக்குள் பெய்யும் மழை<br>பெருங்கதையாடல்<br>கானசாகரம் |
| 14.08.2004 | Hayes | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு |
| 20.11.2004 | Birmingham | கண்ணாடி வார்ப்புகள்,<br>பெருங்கதையாடல்,<br>அவசரக்காரர்கள் |
| 19.12.2004 | Ruislip | அவசரக்காரர்கள்,<br>அரசனின் புத்தாடை<br>ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு |
| 10-02-2005 | Hounslow | அவசரக்காரர்கள் |
| 10-04-2005 | Ruislip | அவசரக்காரர்கள் |
| 23-04-2005 | Ruilip | அரசனின் புத்தாடை |
| 02-07-2005 | Hayes | அரசனின் புத்தாடை |
| 03-12-2005 | Lewisham | அரசனின் புத்தாடை,<br>காத்திருப்பு<br>பெருங்கதையாடல்,<br>கானசாகரம் |
| 28-01-2006 | Hayes | சம்பந்தம் |
| 17-12-2006 | Ruisl[illegible] | சர்ச்சை. காத்திருப்பு,<br>அவசரக்காரர்கள்,<br>மலைகள் வழி மறித்தால்,<br>திக்குதெரியாத காட்டில் |

# THARANI

JEWELLERS & PAWNBROKERS

CHEAPEST

## GOLD LOANS

INSTANT LOANS FOR YOUR GOLD

* No Credit Checking
* No Early Closure Penalties

**OUR RATES OF INTEREST**

**FROM £100 TO £4999 2.95%PM (38.5%)**

**FROM £5,000 TO £10,000 2.75%PM (35.7%)**

Loan Terms Up to 6 Months
Documents Required:
Photo ID. Passport or UK Driving Licence
Proof of Address:
Any Utility Bill or Bank Statements
not Older than 3 Months
TERMS AND CONDITIONS APPLY

**THARANI JEWELLERY**
54 EALING ROAD, WEMBLEY.
MIDDX HA0 4TQ. U.K
**TEL: 020 8902 7111**
**020 8902 6777**
E-mail ashni23@aol.com

NPA NATIONAL PAWNBROKERS ASSOCIATION

Authorised and regulated by the Financial Conduct Authority

# எமது லண்டன் மேடையேற்றங்கள் – தொடர்

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 10-10-2006 | Sutton | சர்ச்சை |
| 17-01-2007 | Harrow | சர்ச்சை |
| 27-01-2007 | Hayes | சர்ச்சை, காத்திருப்பு |
| 09-03-2008 | Ruislip | அரசனின் புத்தாடை<br>எல்லாம் தெரிந்தவர்கள்<br>வேருக்குள் பெய்யும் மழை பாவி? |
| 22-03-2008 | Alperton | வேருக்குள் பெய்யும் மழை |
| 28-06-2008 | Hayes | எல்லாம் தெரிந்தவர்கள் |
| 05-07-2008 | Rayners Lane | அவசரக்காரர்கள் |
| 02-01-2009 | Ruislip | மரணத்துள் வாழ்வு |
| 16-01-2009 | Harrow | பாவி? |
| 25-01-2009 | Harrow | பாவி? |
| 29-03-2009 | Wembley | பிரத்தியேக காட்சி |
| 05-04-2009 | Harrow | படிக்க ஒரு பாடம் நாடகம் |
| 02-04-2010 | Ruislip | ஒற்றுமை, இது ஒரு நாடகம்<br>படிக்க ஒரு பாடம்<br>தர்மம், சம்பந்தம் |
| 13-10-2010 | Kensington | ஒற்றுமை, மழை,<br>பிரத்தியேகக் காட்சி |
| 28-05-2011 | Ruilip | தர்மம், அயலார் தீர்ப்பு<br>படிக்க ஒரு பாடம்<br>என் தாத்தாவுக்கு ஒரு<br>குதிரை இருந்தது<br>கானசாகரம் மெல்லிசை |
| 24-09-2011 | Sutton | அயலார் தீர்ப்பு<br>படிக்க ஒரு பாடம்<br>என் தாத்தாவுக்கு ஒரு<br>குதிரை இருந்தது, பாடம்<br>கானசாகரம் |
| 23-10-2011 | Ruislip | படிக்க ஒரு பாடம் |
| 26-10-2011 | Croydon | பாடம் |
| 23-06-2012 | Croydon | பாடம் |
| 13-10-2012 | Watford | பிரத்தியேக காட்சி,<br>தப்பி வந்த தாடி ஆடு<br>துளிரும் சருகுகள்<br>அவசரக்காரரகள் |
| 27-10-2012 | Barking | துளிரும் சருகுகள்,<br>அவசரக்காரர்கள் |
| 11-11-2012 | Ruislip | தப்பி வந்த தாடி ஆடு |
| 02-02-2013 | Wembley | படிக்க ஒரு பாடம் |
| 03-02-2013 | Feltham | தப்பி வந்த தாடி ஆடு |
| 13-04-2013 | Kensington | தப்பி வந்த தாடி ஆடு,<br>துளிரும் சருகுகள், பாடம் |

| திகதி | இடம் | நாடகங்கள் |
|---|---|---|
| 20-04-2013 | Ruislip | தப்பி வந்த தாடி ஆடு |
| 24-11-2013 | Watford | சூறாவளி,<br>ஒன்று பட்டால் உண்டு வாழ்வு |
| 19-01-2014 | Feltham | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு |
| 09-02-2014 | Greenwich | சூறாவளி<br>- நாடகத்தின் ஒரு பகுதி |
| 03-03-2007 | Croydon | சர்ச்சை அவசரக்காரர்கள் |
| 31-03-2007 | Tooting | அவசரக்காரர்கள், சர்ச்சை |
| 09-04-2007 | Ruislip | கண்ணாடி வார்ப்புகள்,<br>மலைகள் வழி மறித்தால்<br>சர்ச்சை, |
| 05-05-2007 | Ruislip | மலைகள் வழி மறித்தால் |
| 16-06-2007 | Greenford | மலைகள் வழி மறித்தால் |
| 30-06-2007 | Rayners Lane | அவசரக்காரர்கள் |
| 23-09-2007 | Ruilip | அவசரக்காரர்கள் |
| 27-10-2007 | Croydon | பசி, அவசரக்காரர்கள் |
| 26-01-2008 | Harrow | பாவி? |
| 27-01-2008 | Hayes | அவசரக்காரர்கள் |
| 23-02-2008 | Ilford | பாவி? |
| 19-04-2014 | Ruislip | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு |
| 05-10-2014 | Watford | சமூக விரோதி<br>அரசனின் புத்தாடை |
| 17-01-2015 | Rickmansworth | நெட்டை மரங்கள்<br>அரசனின் புத்தாடை<br>சூறாவளி |
| 29-03-2015 | Wimbledon | அவசரக் காரர்கள் |
| 18-04-2015 | Rickmansworth | பாடம் |
| 01-05-2016 | Hayes | பாடம் |
| 23-07-2016: | Ruislip | புதிய பயணம்,<br>மலைகளை அகற்றிய<br>மூடக் கிழவன்<br>பாடம், சூறாவளி |
| 15-04-2017 | Ruislip | மலைகளை அகற்றிய<br>மூடக் கிழவன் |
| 29-04-2017 | Alperton | அவசரக் காரர்கள் |
| 30-04-2017 | Wimbledon | மலைகளை அகற்றிய<br>மூடக் கிழவன் |
| 08-10-2017 | Alperton | புதிய பயணம், யுகதர்மம்<br>கானசாகரம் |
| 28-10-2017 | Walthamstow | பரமார்த்தகுருவும் சீடர்களும் |

SKC

Estd. 1992

# SRIKANTH & CO.

# SOLICITORS

We practice in the following areas of law:

- CONSUMER PROBLEMS
- CONVEYANCING – RESIDENTIAL
- CONVEYANCING – COMMERCIAL
- EMPLOYMENT LAW
- HOUSING MATTERS
- IMMIGRATION
- LANDLORD & TENANT
- LICENSING – COMMERCIAL PREMISES
- LITIGATION – CIVIL & COMMERCIAL
- MATRIMONIAL & FAMILY LAW
- WELFARE MATTERS
- WILLS & PROBATE

Authorised and regulated by the Solicitors Regulation Authority
(SRA No: 564285)

**557 HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX, HA0 2DW**

TEL: **020 8795 0648** FAX: **020 8795 0649** MOB: **07831195979**

EMAIL: **info@srikanthsolicitors.co.uk**

WEBSITE: **www.srikanthsolicitors.co.uk**

THE LAW SOCIETY • ACCREDITED

Conveyancing Quality

# நீண்ட பயணம்



**நா. சாந்திநாதன்** - கனடா
அரங்கவியலாளர்

ஓ...நீண்ட பயணம்....40 ஆண்டுகள்.....ஒரே குடையின் கீழ்........ஒரு சாதனைதான் கூட்டு முயற்சிக்கு......ஓர் உதாரணம்....... நாடகவரலாற்றின் .........ஓர் பொக்கிஷம்

திரு.க.பாலேந்திராவின் தலைமையில் இயங்கும் அவைக்காற்று கலைக் கழகத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவன் என்ற வகையிலும், அவ்வப்போது கனடா வருகை தரும் வேளை ஆதரவுநல்கி, அவர்களின் மேடையேற்றங்களில் நடிக்கும் வாய்ப்பைப்பெற்றவன் என்ற வகையிலும், அவைக்காற்று கலைக் கழகம் அதன் பயணத்தில் 40 ஆண்டுகளைத்தாண்டி நிற்கிறது என்பது மட்டற்ற மகிழ்ச்சியைத்தருகிறது.

கட்டுபெத்தை வளாகத்தில் க. பாலேந்திராவுடன் ஏற்பட்ட எம் உறவு, "பிச்சை வேண்டாம்"(1975) நாடகமூலம் இணைந்து நடித்ததினால் வலுப்பெற்றது. காதலர்களாகத் தோன்றிய பாலேந்திரா,ஆனந்தராணி அவர்களைக் கல்யாணம் வரை இழுத்துச்சென்றதும் இந்தக்காலப் பகுதியில்தான். அப்பொழுது மேடையேற்றப்பட்ட கண்ணாடி வார்ப்புகள் என்ற நாடகத்தின் பெரும் வெற்றிதான் அவைக்காற்று கழகத்தின் உருவாக்கத்திற்கு வித்திட்டது. தன் ஆர்வத் தொண்டர்களை இறுகவே இணைத்து கழகத்தை வளர்க்க ஆரம்பித்தார்கள். தொடர்ந்து 4 வருடங்களாக இலங்கையில், நவீன நாடக உலகுக்கு காத்திரமான நாடகங்களை அளிக்கை செய்து, வெற்றி நடை போட்ட அவைக்காற்றுக் கழகம், பாலேந்திரா தம்பதியினரின் லண்டன் நகர்வினால், அங்கே வேரூன்றித் தளைக்க ஆரம்பித்தது.

அவைக்காற்றுக் கழகத்தின் சிறந்த படைப்புக்கள் நூற்றுக்கணக்கான மேடையேற்றங்களைக் கண்டிருக்கின்றன. லண்டன் மாநகரத்தோடு மட்டும் நின்றுவிடாமல் ஏனைய நாடுகளுக்கும் சென்று, நாடக ரசிகர்களின் தாகத்தை தீர்ப்பது மட்டுமில்லாமல், படைப்பாளிகளின் ஆர்வத்தைத் தூண்டி வருவது பாராட்டுதற்குரியதாகும்.

இவற்றுக்கு மேலாக லண்டன் வாழ் தமிழ் சிறுவர்களுக்கு வகுப்புக்கள் நடாத்தி, அவர்கள் மூலம் சிறுவர் நாடகங்கள் மேடையேற்றி தமக்கென தனியிடத்தை வகுத்திருக்கிறார்கள். சிறுபிள்ளையில் நாடகப் பயிற்சி பெற்று நடித்து வந்தவர்கள், வளர்ந்து மணமாகிய பின்னும் நடித்து வருகிறார்கள் என்றால், அவைக்காற்றுக் கழகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியும், அரவணைத்து நகர்த்துகின்ற கூட்டுமுயற்சியும்தான் காரணம். நாடகத்திற்கான எதிர்காலச் சந்ததியினரை வெகு அக்கறையோடு உருவாக்குகின்ற பெருமை அவைக்காற்றுக் கழகத்தையே சாரும். நாடக மேடையற்ற வரலாற்றில் அவைக்காற்றுக் கழகம், 40 ஆண்டுகளாக, ஒரே தலைமையின் கீழ் கலைக்காற்றுகின்ற சேவை அளப்பரியசாதனையாகும்.

சொல்லிடலங்கா சோதனைகள் பல தாண்டி, எழுத்திலடங்கா சாதனைகள் புரிந்து, எண்ணிலடங்கா மேடையேற்றம் கண்ட அவைக்காற்றுக் கழகத்திடமிருந்து இன்னும் பல படைப்புக்களை எதிர் பார்க்கிறது உலக நாடக ரசிகர் வட்டம்.

தொடரட்டும் உங்கள் மகத்தான சேவை..................... பரவட்டும் நாடகக் கலையின் நுட்பங்கள்.

வளரட்டும் கழகம் மேலும் மேலும்...................... ஒலிக்கட்டும் உலகெங்கும் உங்கள் புகழ்.

# SOMA SOLICITORS

34 Eastcote Lane, South Harrow, Middlesex HA2 8DB

**COMMISSIONERS FOR OATHS**

**WE SPECIALISE IN**

- **Residential & Commercial Conveyancing**

  உங்களது வீடுகளை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும்.

  உங்களது வியாபார ஸ்தாபனங்களை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- **Immigration & Nationality**
- **Family & Matrimonial**
- **Licensing Applications**
- **Landlord & Tenant**
- **Wills & Probate**

**020 8423 0203**

**Mobile: 07919 388 355 Fax: 020 8423 6465**

**OPENING TIMES: MON - FRI 9.30am to 5.30pm**

www.somasolicitors.co.uk

email: admin@somasolicitors.co.uk

THE LAW SOCIETY ACCREDITED Conveyancing Quality

Lexcel Practice Management Standard Law Society Accredited

# தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்

# நினைவில் நின்றவை



**சி. குணசிங்கம்**

அரங்கவியலாளர், சிட்னி - அவுஸ்திரேலியா

திரும்பிப் பார்க்கின்றபோது, 40 ஆண்டுகள் 40 நாட்கள் போல் தோன்றுகின்றது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலைப் பிரிவில் மாணவனாக 1977ல் அடியெடுத்து வைத்து ஓராண்டுக்குள் க. பாலேந்திராவிற்கு அறிமுகமான சில மாணவர்களில் நானும் ஒருவன்.

நேர்த்தியான நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றும் முயற்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர் க. பாலேந்திரா. எனது முதல் நாடகம் அவரால் நெறிப்படுத்தி 1978 இல் மேடையேற்றிய நட்சத்திரவாசிகள். அந்த மேடையில்தான் அவர் மனைவி ஆனந்தராணியும் எனக்கு அறிமுகமானார்.

இவர்களோடு இன்னும் பல நாடகங்களில் பங்களிக்கும் வாய்ப்பு எனக்கு தொடர்ந்து கிடைத்தது. அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் அன்றைய படைப்புகளான, கண்ணாடி வார்ப்புகள், ஒரு பாலை வீடு, முகமில்லாத மனிதர்கள், அரையும் குறையும். யுகதர்மம் மற்றும் இன்னும் சில நாடகங்களில் நடிகனாகவும், Costume Designer ஆகவும், Stage sets Designer ஆகவும், பங்குபற்றியதோடு மட்டுமல்லாமல், சில நாடகங்களில் பாலேந்திராவின் நெறியாள்கைக்கு ஒரு வகையில் உதவியாளராகவும் இருக்கும் வாய்ப்பும் பெற்றிருந்தேன்.

இந்த வாய்ப்பு, பிற்காலங்களில் நான் சிட்னி, அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற நாட்களில் நண்பன் அ. சந்திரகாசனுடன் சேர்ந்து பல நாடகங்களை இயக்கி மேடையேற்றும் பணிக்கு பெரிதும் உதவியாக இருந்தது.

ஆரம்பத்தில் இருந்தே "மோதிரக் கையில்" குட்டு வாங்கியதோ என்னவோ, நான் என்னுக்குள் தரமான நாடகங்களை அடையாளம் கண்டு, ரசிக்கும் அல்லது மேடையேற்றும் பண்பைக் கற்றுக் கொண்டேன்.

அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் மேடையேற்றங்களின்போது, நடிப்பில் மாத்திரமன்றி, மேடை அலங்காரம், உடை அலங்காரம் என்பவற்றிலும் பரீட்சார்த்த நடவடிக்கைகளை (Experimental Approch) மேற்கொண்டிருக்கின்றோம்.

"யுகதர்மம்" நாடகத்தில் குறிப்பாக "முகமூடி" கண்ணாடி வார்ப்பு நாடகத்தில் மேடை "ஒரு பாலை வீடு நாடகத்தில் மேடை அமைப்பு போன்ற அனுபவங்கள் நினைவிற்கு வருகின்றன. நான் ஆரம்பத்தில் கட்டடக்கலை மாணவனாகவும் தொடர்ந்து கட்டடக்கலைஞராகவும் இருந்ததனால் ஒரு வேளை எனக்கு அந்த மேடை அமைப்பு! பரீட்சார்த்தங்களில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அதே பரீட்சார்த்த உத்திகளை தொடர்ந்தும் சிட்னியிலே மேடைகளில் கையாளும் பக்குவம் எனக்குள் வளர்ந்திருந்தது.

நாடகம் பற்றிய அடிப்படை அறிவையும், அதனைத் தொடர்ந்த நாடகம் பற்றிய "பல்லறிவு" (Multiple Knowledge) பெற்றுக் கொண்டதற்கும், பின்னால் இருப்பவை "அவைக்காற்றுக் கலைக் கழகமும், க. பாலேந்திராவுமே.

இன்று லண்டனில் 40 வருடங்களை கொண்டாடும் அவைக்காற்றுக் கலைக் கழகமும், பாலேந்திராவின் சேவையும் இன்னும் வளர வாழ்த்துகின்றேன்.

# பாலேந்திராவின் நான்கு தசாப்த கால நாடக மேடையேற்றப் பணி

**சோ.ராமேஸ்வரன் -ஊடகவியலாளர்**



நான்கு தசாப்தங்களுக்கு முன் ஒரு நாள் வாலிபர் ஒருவர் எமது காரியாலயத்திற்கு வந்து எமது செய்தி ஆசிரியருடன் எதையோ கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். சிறிது நேரத்தில் செய்தி ஆசிரியர் என்னைப் பார்த்து 'இவர் ஒரு விஷயத்தைச் சொல்லுவார். அதைச் செய்தியாக எழுதித் தாங்க' என்று கூறுகிறார். அந்த செய்தி ஆசிரியர்.... காலஞ்சென்ற டேவிட் ராஜு. அந்த வாலிபர்.... பாலேந்திரா. நான் சோ.ராமேஸ்வரன். நானும், காலஞ்சென்ற டேவிட் ராஜுவும் பணிபுரிந்த பத்திரிகை 'வீரகேசரி'. எனது பதவிப் பெயர் உதவி ஆசிரியர். பாலேந்திரா என்று நான் வெறுமனே எழுதிவிட்டேன். யார் இந்த பாலேந்திரா? அவர் தான் நான்கு தசாப்தங்களுக்கு முன் இலங்கையில் பல நாடகங்களை மேடையேற்றி ஒரு சரித்திரத்தைப் படைத்திருந்தவர். அச் சமயத்தில் அவர் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையைக் கற்றுக்கொண்டிருந்தார். ஆனாலும் அரங்காடல் கலையில் ஒரு தாகத்தினை, ஓர் ஆர்வத்தினைக் கொண்டிருந்தார்.

சரி விஷயத்துக்கு வருகிறேன். முதல் அறிமுகத்தினத்தன்று அவர் என்னருகில் வந்து அமர்ந்தார் அல்லவா? அவர் என்ன விஷயத்தை சொல்லப் போகிறார், நான் எதைச் செய்தியாக எழுதப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. அவர் மிகவும் மெலிந்த குரலில், சாந்தமாக விஷயத்தைச் சொன்னார். அது அவர் மேடையேற்றவிருக்கும் நாடகம் சம்பந்தமான செய்தி. நாடகத்தின் பெயர் 'கண்ணாடி வார்ப்புக்கள்'. அந்த நாடகத்தைப் பற்றி சுருக்கமாகச் சொன்னார். அது ரென்னஸி வில்லியம்ஸ் எழுதி 1944இல் மேடையேற்றப்பட்ட 'கிளாஸ் மெனாஜரி' (The Glass Menagerie) என்ற ஓர் ஆங்கில நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு என்றும் கூறினார். அன்றைய தினம் அவர் என்னுடன் நிறைய கதைக்கவில்லை. விஷயத்தைச் சொல்லிவிட்டு போய்விட்டார். அவர் போன பின்னர் செய்தி ஆசிரியர் டேவிட் ராஜு என்னை அழைத்து ஒரு டிக்கெட்டைத் தந்தார். டிக்கெட்டைப் பார்த்தேன். 'கண்ணாடி வார்ப்புக்கள்' நாடகத்திற்கான டிக்கெட் அது. 'போய் பார்த்திட்டு வாங்க' என்று செய்தி ஆசிரியர் கூறினார்.

ஒரு சனிக்கிழமை என்று ஞாபகம். புதிய கதிரேசன் மண்டபத்திற்குச் சென்றேன். மண்டபத்தில் கூட்டம் அவ்வளவாகவில்லை. பல்கலைக்கழக மாணவர்களின் நடமாட்டம் தான் அதிகம். மண்டபம் அரைவாசி தான் நிரம்பியிருந்தது. இலங்கையில் மேடையேற்றப்படும் உள்ளூர்வாசிகளின் நாடகங்களுக்கு எப்பொழுதுமே இது தான் நிலை. அன்றல்ல இன்றும் அதே நிலை தான். நாடகம் தொடங்கியது. முதல் காட்சி, இரண்டாவது காட்சி... ஆங்கில நாடகம் என்ன மாதிரி மேடையேற்றப்பட்டிருக்குமோ அதே பாணியில் மிகவும் யதார்த்தமாகவும், உயர் தரமாகவும் நாடகம் மேடையேற்றப்பட்டது. நாடகம் இந்தளவு தரம் வாய்ந்ததாக இருக்கும் என்று நான் துளியளவேனும் எதிர்பார்க்கவில்லை. 'புரோக்கர்' நாடகங்களையும், 'கோமாளிகள்' நாடகங்களையும், தென்னகத்து சினிமா பாணி நாடகங்களையும் பார்த்து நாடகங்கள் என்றாலே வெறுப்புடன் திகழ்ந்த எனக்கு இது ஒரு புது அனுபவத்தை - என்னுள் விழுமிய உணர்ச்சிகளை ஏற்படுத்தி திக்கமுக்காட வைக்கும் அனுபவத்தை உட்புகுத்தியது. ரொம், லோரா, அமெண்டா, ஜிம் ஓ' கோணர் என சகல பாத்திரங்களுமே என்னுள் பதிந்து என்னை ஒரு பரவசநிலைக்கு கொண்டு சென்றுவிட்டது. அந்தப் பாத்திரங்களில் நடித்த பாலேந்திரா (ரொம்), ஆனந்தராணி (லோரா), நிர்மலா (அமெண்டா) மற்றும் ஜெரால்ட் (ஜிம் ஓ' கோணர்) ஆகியோர் என் மனக்கண்களில் நீண்ட நாட்களாக குடிபுகுந்திருந்தனர். ஒரு சிறந்த நாடகத்தைப் பார்த்துவிட்ட மனத்திருப்தி என்னை அரவணைத்துவிட்டது. இறுதியாக நடிகர்கள் மேடை முன் வந்து பார்வையாளர்கள் முன் 'வணக்கம்' தெரிவித்த போது, கரகோஷம் வானத்தின் எல்லையை இரண்டாக வளைத்தது போல இருந்தது. நானும் நிறைய நேரம் கரகோஷத்தில் என்னை மறந்திருந்தேன். அதன் பின்..... பாலேந்திரா என்றால் என்னுள் ஒரு மரியாதை.

அதன் பின் நிறைய தடவைகள் அவர் அலுவலகத்திற்கு வருவார். அவர் மேடையேற்றிய நாடகங்கள் பற்றிய விபரங்களைத் தருவார். பெரும்பாலும் நான் தான் செய்திகளை எழுதுவேன். இவ்வாறாக அவர் மேடையேற்றிய 'யுக தர்மம், 'மழை' ஆகிய நாடகங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பார்த்தேன். பரவசமடைந்தேன்.

இப்போது பாலேந்திராவுக்கும் எனக்கும் இடையிலான பழக்கம் நட்புறவாகிவிட்டது. அவர் எமது அலுவலகத்திற்கு வந்தால் நேரே என்னிடம் வரும் அளவுக்கு நட்பு இறுகிவிட்டது. அதன் பின் நாடகங்களை மேடையேற்றுவதில் உள்ள பிரச்சனைகள் பற்றியெல்லாம் அவர் விபரிப்பார். என்னைப் பொறுத்தளவில் மேடையேற்றங்கள் எல்லாம் அவரது தனிப்பட்ட முயற்சியுடன் தான் விளங்கின என்பதைப் புரிந்து கொண்டேன். மேடையேற்றங்களால் நிதிரீதியாக சில நஷ்டங்களையும் ஏற்றிருப்பார் என நினைக்கிறேன். ஆனால், அவர் தொடர்ந்தும் தரமான நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்தார்.

'கண்ணாடி வார்ப்புக்கள்' ஒன்பதாவது தடவையாக மேடையேற்றப்பட்டது. இனி பத்தாவது தடவையாக மேடையேற வேண்டும். இந்நேரத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 'வீரகேசரி'யில் நான் இணைந்து கொள்வதற்கு முன் வவுனியாவில் 'வீரகேசரி' நிருபராக பணிசெய்தேன். அந் நாட்களில் நாடகங்களை மேடையேற்றுவது எனது பொழுதுபோக்கு. இந்த வகையில் நான் வவுனியாவில் மூன்று நாடகங்களை மேடையேற்றியிருந்தேன். கொழும்புக்கு வந்த பின் நாடகமொன்றை மேடையேற்ற வேண்டும் என்ற ஆசை என்னுள் கிளர்ந்தெழுந்தது. ஆனால் நிதி வசதியின்மை, நேரமின்மை போன்ற காரணங்களால் ஒரு நாடகத்தையும் மேடையேற்ற முடியவில்லை. இதனால் என்னுள் கொழும்பில் ஒரு நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்றிருந்த எனது அவாவுக்கு தீனி போடுமாற் போல 'கண்ணாடி வார்ப்புக்கள்' நாடகத்தை பத்தாவது தடவையாக மேடையேற்ற வேண்டும் என்ற ஆசை துளிர்விட்டது. எனது விருப்பத்தினை பாலேந்திராவிடம் தெரிவித்தேன். உடனேயே சரி என்றார். புதிய கதிரேசன் மண்டபத்தில் மேடையேற்றுவது என முடிவாகியது. டிக்கெட்கள் அச்சடிக்கப்பட்டன. அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் என எல்லோரிடமும் சென்று டிக்கெட்களை விற்றேன்.

1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் ஒரு சனிக்கிழமை என்று ஞாபகம். நாடகம் மேடையேற்றப்பட்டது. நாடகம் முடிவடைந்தது. நாடகத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்த அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் யாவரது முகங்களிலும் மகிழ்ச்சியை, திருப்தியை என்னால் காணக்கூடியதாக இருந்தது. சிலர் பாலேந்திராவிடம் சென்று தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். எல்லாச் செலவுகளும் போக எனக்கு ஆயிரம் ரூபாய் சொச்சம் இலாபமாகக் கிட்டியது. அதில் கணிசமான தொகையை அவரிடம் நீட்டினேன். ஆனால், அவர் எனது கரத்தை மடித்துவிட்டார். ஒரு சதமும் எடுக்க மறுத்துவிட்டார். எவ்வளவோ வற்புறுத்தியும் எனது கோரிக்கையை மறுத்துவிட்டார். இறுதியாக நடிகர்களுக்கு அருகில் உள்ள சைவ உணவகத்தில் இராப்போசனத்தை அளித்தேன். இங்கு தான் பாலேந்திராவின் பெருந்தன்மை பளிச்சிடுகிறது. நாடகத்தை மேடையேற்றி காசு பார்க்கலாம் என்ற எண்ணம் அவரில் இல்லை என்பதற்கு இது ஒரு சான்றைப் பகன்றுவிட்டது.

அந்த வருடம் நான் 'வீரகேசரி'யில் இருந்து விலகி அரசாங்க நிறுவனத்தில் சேர்ந்து கொண்டேன். அதன் பின் அவருடன் இருந்த தொடர்பு சற்று விலகிக் கொண்டது. ஆனாலும், ஆனந்தராணியை அவர் திருமணம் செய்த பின்னர், அவர் குடியிருந்த வீட்டில் நடத்திய இராப்போசன விருந்துக்கு நானும், எனது மனைவியும் சென்றோம். அதன் பின் 1983ஆம் ஆண்டில் இனக்கலவரம் வந்து எல்லோரின் நிரந்தர விலாசங்களை தலைகீழாக்கியது. எனது நிரந்தர விலாசமும் மாற, பாலேந்திராவுடனான தொடர்பு அற்றே போனது. அவர் என் மனதில் இருந்தாலும் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஆனால், அவர் லண்டனில் இருக்கிறார் என்று தெரியவந்தது. அங்கும் அவர் நாடகங்களை மேடையேற்றுகிறார் என்று பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசை என்னுள் முகாமிட்டது. ஆனால், சந்தர்ப்பம் கிட்டவேயில்லை. அவருடன் எப்படி தொடர்பு கொள்ளலாம்? முகநூல் ஊடாக தொடர்பு கொண்டேன். தொடர்பு கிட்டியது. பின்னர் அவராகவே லண்டனில் இருந்து என்னுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டார். நிறைய நேரம் அளவளாவினோம். இப்பொழுதும் எதுவித நிதி எதிர்பார்ப்புக்கள் இன்றி நாடகங்களை லண்டனில் மேடையேற்றுகின்றார் என்பதை அவரின் பேச்சினிடையே உணர்ந்து கொண்டேன். இது ஈழத்து கலைஞர்களுக்கு ஒரு சாபக்கேடு. எந்த நாட்டுக்குப் போனாலும் இதே கதி தான்.

ஆனால், பாலேந்திரா என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற முதுமொழிக்கு ஏற்ப, தன் நாடகப் பணியைத் தொடர்கிறார். அவரது இந்த பயணத்தில் அவரது மனைவி ஆனந்தராணியும் கூடவே செல்வது அவருக்கு ஓர் ஆறுதல் என்றே கூறலாம். பாலேந்திராவின் கலைப்பயணம் நான்கு தசாப்தங்களை கடந்துவிட்டது. அவர் இன்றும் சளைக்காமல் நாடகங்களை மேடையேற்றுவது - அதுவும் தமிழ் ஓரளவுதான் தெரியும் லண்டன் கலைஞர்களை வைத்து மேடையேற்றுவது உண்மையிலேயே ஒரு சாதனைதான். அவரது கலைப்பயணம் மென்மேலும் சீரும் சிறப்புடன் தொடரவேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

**பின்குறிப்பு:**

கற்பனைப் பாத்திரங்களில் பாலேந்திராவும், ஆனந்தராணியும் நடிக்கும் போதெல்லாம் இந்த கற்பனைப் பாத்திரங்கள் வாழ்க்கையிலும் உண்மையான பாத்திரங்களாக இணைய வேண்டும் என்று நினைப்பேன். அது நடந்ததில் மகிழ்ச்சியே.


# ‘கண்ணாடி வார்ப்புகள்’
## – நாடகம் சில பதிவுகள்

**க. பாலேந்திரா நெறியாளர்**

எனக்கு மிகவும் பிடித்த நாடகமான ‘கண்ணாடி வார்ப்புகள்’ புதிய தயாரிப்பாக இன்று மேடையேறுகிறது. இதுவரை 70 நாடகங்களை நான் நெறிப்படுத்தியிருந்தாலும் இந்த நாடகம் எனக்கு மிகவும் நெருக்கமான நாடகமாக நான் உணர்கிறேன். இன்று இந்த நாடகத்தில் புலம் பெயர் நாட்டில் பிறந்து வளரும் இளையவர்கள் மூவர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள். இவர்கள் சிறுவர்களாக எமது நாடகப் பயணத்தில் இணைந்தவர்கள். இவர்களுக்கு இந்த நாடகம் ஒரு பெரிய சவால். பாத்திர இயல்புகளை உணர்ந்து தமிழில் பேசி நடிப்பது மிகக் கடினமானது. மிகுந்த உழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் இவர்கள் இன்று மேடையேறுகிறார்கள்.

முதல் மேடையேற்றத்தில் பாலேந்திரா, நிர்மலா, ஆனந்தராணி, ஜெரால்ட் ஆகியோர் நடித்தனர். கொழும்பிலும் மற்றும் பல இடங்களிலும் 13 தடவைகள் இந்த நாடகத்தை மேடையேற்றினோம். இந்த நாடகம் இலங்கை தொலைக்காட்சியான ரூபவாஹினி ஆரம்பமாகிய போது முதல் நாடகமாக அங்கு பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பாகியது. இலங்கை வானொலியிலும் பல தடவைகள் ஒலிபரப்பப்பட்டது.நான் புலம் பெயர்ந்து வந்த பின்னர் இலங்கையில் நான் வைத்திருந்த நாடகப் பிரதிகளும் நூல்களும் போர்ச் சூழலில் அழிந்து போய்விட்டன. 90களில் தொடர்பாடல் வசதிகள் இன்றுபோல் இருக்கவில்லை. தீவிர தேடுதலுக்குப் பின்னர் கனடாவில் வசிக்கும் எனது நண்பர் ஒருவரிடம் ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகப் பிரதி இருப்பதை அறிந்தேன். இந்தப் பிரதி 1978ல் முதல் மேடையேற்றத்தின்போது மேடை நிர்வாகத்திற்குப் பாவிக்கப்பட்ட பிரதியாகும். எனது மேடைக் குறிப்புகளும் காட்சிகளின் நேர அளவுகளும் இந்தப் பிரதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த திரு. ஆனந்தநடராஜா மேடை நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவிருந்தார். இந்தப் பிரதியை கனடாவில் இருந்து பெற்று புகலிடத்தில் 1999 இல் புதிய தயாரிப்பாக மேடையேற்றினேன். இதில் வாசுதேவன், ஆனந்தராணி, தர்ஷினி, சிவசுதன் ஆகியோர் நடித்தனர். நோர்வே, கனடா, ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களில் மேடையேறிய போது நன்கு வரவேற்கப்பட்டது. மீண்டும் யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும் மகாஜனக் கல்லூரியிலும் சுருக்கப்பட்ட வடிவில் 2013 இல் மேடையேறியது.

நான் நெறிப்படுத்திய அநேகமான நாடகங்களின் பிரதிகளை மிகச் சிரமப்பட்டு தேடி எடுத்து வைத்துள்ளேன். எமது நாடகங்களை நூல்களாக பதிவு செய்யும் முயற்சியில், முதல் நூலாக “கண்ணாடி வார்ப்புகள்” 2013ஆம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டு எமது ‘யுகதர்மம்’ நாடகமும் நூலாக வெளிவந்துள்ளது. இந்த நூல்கள் பல்கலைக் கழகங்களிலும் பாடசாலைகளிலும் ‘நாடகமும் அரங்கியலும்’ கற்கும் மாணவர்களுக்கு பயன்படுகின்றன என்ற செய்தி எமக்கு மகிழ்ச்சி.



‘கண்ணாடி வார்ப்புகள்’ கலாச்சார இடைவெளிகளைக் கடந்து இன்றும் பல்வேறு நாடுகளிலும், மேடைகளிலும், திரையிலும் நிலைத்து நிற்கும் உன்னத கலை வார்ப்பு. இந்த நாடகத்தில் நான்கு பாத்திரங்கள் மட்டும்தான். அவர்களிடையே முரண்பாடு வெடிக்கிறது. அவர்கள் சூழ்நிலையின் கைதிகள். கணவனால் கை விடப்பட்டு இந்த அவசர உலகில் தான் நேசிக்கும் பிள்ளைகளை ஆளாக்கக் கஷ்டப்படும் தாய். எழுத்தாளனாக இருந்தும் சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தினால் சப்பாத்துக் கம்பனியில், தான் விரும்பாத தொழிலை, குடும்பத்திற்காக செய்யும் மகன். தாழ்வுச் சிக்கலில் உழலும் மகள். இப்படியான குடும்பங்களை எந்த சமுதாயத்திலும் பார்க்க முடியும். உலகப் பொதுமையான இந்தக் கரு அழகான மென்மையான நாடகமாக மிளிர்ந்துள்ளது. தனது சொந்த நிராசைகளை, மிக அற்புதமாக நாடகமாக்கியுள்ளார் அமெரிக்க நாடகாசிரியர் ரென்னஸி வில்லியம்ஸ். 1940களில் எழுதிய இந்த நாடகம் இன்றும் பல மேடைகளிலும் புத்தாக்கம் பெற்று மேடையேற்றப்படுகின்றது. பல நாடுகளிலும் வெற்றி பெற்ற இந்த நாடகம் அமெரிக்காவின் மிகச் சிறந்த நாடகமாக தற்போது புகழப்படுகின்றது ‘இளையவர்களே எமது எதிர்காலம்’ என்ற எமது வாசகத்திற்கிணங்க இளையவர்கள் பங்கேற்கும் இந்த நாடகம் நாடக ரசிகர்களுக்கு நல்ல அரங்க அனுபவமாக உங்கள் வரவேற்பைப் பெறும் என்று நம்புகிறேன்

## கண்ணாடி வார்ப்புகள் –முதல் மேடையேற்றம் (09–06–78) குறித்த

# விமர்சனத்தில் ஒரு பகுதி

### சித்திரலேகா மௌனகுரு

இம்மாதம் ஒன்பதாம் திகதி (09-06-78) மாலை யாப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ரென்னஸி வில்லியம்ஸின் (த கிளாஸ் மெனேஜரி) என்ற நாடகத்தின் தமிழாக்கமான “கண்ணாடி வார்ப்புகள்” மேடையேறியது. யாழ். வளாக இலக்கிய மன்ற நிதிக்காக க. பாலேந்திராவினால் தயாரிக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட இந்நாடகம் சமீப காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேடையேறிய ஒரு சில தரமான நாடகங்களிடையே முதன்மை வகிக்கிறது என்று துணிந்து கூறலாம்.

ரென்னஸி வில்லியம்ஸ் என்ற அமெரிக்க நாடகாசிரியரது புகழ்பெற்ற நாடகங்களில் ஒன்றுதான் (த கிளாஸ் மெனேஜரி) ரென்னஸி வில்லியம்ஸை ஒரு நாடகாசிரியராக பொதுமக்களிடையே ஜன ரஞ்சகப்படுத்தியதும் பலதடவை வெற்றிகரமாக மேடையேற்றி புகழ்பெற்றதுமான இந்நாடகம் உலகப் புகழ்பெற்ற நாடகங்களின் வரிசையில் தவறாது இடம்பெறுவதாகும். ரென்னஸி வில்லியம்ஸ் தனது இளமைக்கால வாழ்க்கையனுபவங்களையே இந்நாடகமாக எழுதினார் என கூறப்படுகிறது. இளமையில் தந்தையால் கைவிடப்பட்ட குடும்பத்தில் தாயுடனும் சகோதரியுடனும் வாழ்ந்து கொண்டு சப்பாத்துக் கம்பனியில் வேலை பார்த்த ரென்னஸி வில்லியம்ஸ் குடும்பப் பொறுப்புகட்கும் தனது இலட்சியம் கனவுகள் ஆகியவற்றுக்கும் இடையே சிக்கித் தடுமாறும் ரொம் என்ற பாத்திரத்தை இந் நாடகத்தில் உருவாக்கினார். இப்பாத்திரத்தின் மூலம் ரென்னஸி வில்லியம்ஸ் தன்னையே பிரதிபலித்தார். ரொம் என்ற பாத்திரத்தை விட அமென்டா-தாய், லோரா-மகள் ஜிம்-விருந்தாளி ஆகிய பாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம் பெறுகின்றன. மொத்தத்தில் நான்கே பாத்திரங்கள் கொண்டு இரு அங்கங்களுடையதான 8 காட்சிகளுடையதாக இந்நாடகம் அமைந்துள்ளது. வேலை செய்யுமிடத்தில் ஏற்பட்ட சச்சரவினாலும் குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாட்டினாலும் குடும்பத்தை விட்டு வெளியேறிய ரொம்மின் நினைவாகவே நாடகம் நடக்கிறது. 1940ம் ஆண்டுகளில் சிதைந்துகொண்டிருந்த அமெரிக்கப் பொருளாதாரச் சூழலில் தேங்கிக்கிடந்த மத்தியதர வர்க்க வாழ்க்கைப் பின்னணியில் இந்நாடகம் எழுதப்பட்டுளது. சாரமற்ற வாழ்க்கையில் சிறைப்பட்டுக் கிடக்கும் மனிதனின் தேம்பல் நாடகத்தின் அடிநாதமாக ஒலிக்கிறது.

அமெரிக்க வாழ்க்கை, அன்னியச் சூழல், மொழிபெயர்ப்பு ஆகிய பதங்களில் தமிழில் இந் நாடகத்தை பார்த்தோரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாத வண்ணம் நாடகம் உணர்த்திய அனுபவம் அமைந்தது. கணவன் கைவிட்டுப் போனதன் பின்னர் மிகுந்த கஸ்ரங்களிடையே தனது இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி அவர்களை நன்னிலை அடைய வேண்டும் என்று கனவு காணும் தாயையும் தனது நிகழ்கால வாழ்க்கையின் ஏமாற்றங்களை மறப்பதற்கு இடையிடையே தனது பெருமையும் இனிமையும் மிக்க இளமைக்கால வாழ்க்கையை நினைவூட்டிக்கொள்ளும் தாயையும் அந்தத் தாயினுடைய அனுபவங்களையும் எம்மிடையே காண முடியும். குடும்பப்பொறுப்பு ஒரு புறம் இழுக்க சொந்த ஆசைகளும் கனவுகளும் இன்னொரு புறம் ஈர்க்க இரண்டுக்குமிடையே அல்லாடும் புதல்வனும் எமது வாழ்க்கையில் நாம் அல்லும் பகலும் காணும் ஒரு பாத்திரமே.

எமக்குச் சொந்தமான பாத்திரங்கள், எமது வாழ்க்கை அனுபவங்கள் ஆகியவை நாடகத்திலும் பிரதிபலித்ததால் அமெரிக்க நாடகமாயினும் பரிச்சயமான அனுபவத்தை இந்நாடகம் அளிக்கவல்லதாயிருந்தது. இவ்வகையில் இவ் அனுபவப் பொதுமையை மனங்கொண்டு இந் நாடகத்தை தேர்ந்தெடுத்த க. பாலேந்திரா பாராட்டுக்குரியவர்.




தமிழில் இந்நாடகத்தைப் பார்த்தபோது அதன் தமிழாக்கம் விதந்து குறிப்பிடக்கூடியதாயிருந்தது. பாலேந்திரா, க. மல்லிகா, நி. நிர்மலா ஆகியோர் சேர்ந்து இந்நாடகத்தினை தமிழாக்கம் செய்திருந்தனர். ஏற்கனவே “கண்ணாடிச் சிற்பங்கள்” என்ற பெயரில் இந்நாடகம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த மொழிபெயர்ப்பில் இல்லாத நெருக்கமும் நெஞ்சைத் தொடும் உணர்வும் இத்தமிழாக்கத்தில் காணப்பட்டது. உரையாடல்களின் பொருள், தொனி உணர்ச்சி ஆகியவற்றை உள்வாங்கி எமக்குப் பரிச்சயமான அன்றாட வழக்குத் தமிழில் அவற்றை இவர்கள் அமைத்திருந்தனர். யாழ்ப்பாண பேச்சு வழக்கின் பொதுத்தன்மை உரையாடல்களில் காணப்பட்டது தவிர மரபுத்தொடர்கள், சிறப்புப் பிரயோகங்கள் ஆகியவற்றையும் கையாண்டமை, மேலே குறிப்பிட்ட பரிச்சயமான அனுபவத்தை இன்னும் நெருக்கமாகவும், ஆழமாகவும் உணர உதவியது. உதாரணத்துக்கு ஒன்று குறிப்பிடலாம். பிள்ளைகளை அன்பாக (டார்லிங்) என்று கூப்பிடும் இடங்களை குஞ்சு, ராசாத்தி, ராசா என்று தமிழாக்கியிருந்தமை மிகுந்த பொருத்தமாயிருந்தது.

இந்நாடகத்தில் ரொம் ஆக பாலேந்திராவும், அமெண்டாவாக நிர்மலாவும், லோராவாக ஆனந்தராணியும், ஜிம் ஆக ஜெராட் உம் நடித்தனர். நான்கு பாத்திரங்களும் ஒருவருக்கொருவர் சோடை போகாமல் தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தினர். எனினும் நாடகப் பார்வையாளரின் ஏகோபித்த பாராட்டுதல்களை நிர்மலாவும் பாலேந்திராவும் பெற்றனர். இவ்விரு பாத்திரங்களும் நாடகத்தில் முன்னணிப் பாத்திரங்களாகையாலும் பலவித உணர்ச்சிச் சாயைகளையும் அதீதமாக வெளிக் காட்ட இடமிருந்தது.

தினகரன் 04-07-1978 கண்ணாடி வார்ப்புகள் நூலில் முழுமையாக பிரசுரமானது.

### தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

### நாடக விழா 2018

# நீண்ட ஒரு VWணத்தில்..

## நாடக நிகழ்வு விபரங்கள்

### இது 17 நாடகங்களின் காட்சி தொகுப்பு நிகழ்வு

| | நாடகங்கள் | முதல் மேடையேற்றம் | மீள் தயாரிப்பு |
|---|---|---|---|
| 1. | யுகதர்மம் | 1979 | 1988, 1998, 2017 |
| 2. | முகமில்லாத மனிதர்கள் | 1980 | 1989, 1995 |
| 3. | மழை | 1976 | 1980, 1985 |
| 4. | சம்பந்தம் | 1982 | |
| 5. | எரிகின்ற எங்கள் தேசம் | 1989 | |
| 6. | பிரத்தியேகக் காட்சி | 1991 | |
| 7. | பாவி | 1978 | 1981, 2008 |
| 8. | அவசரக்காரர்கள் | 1997 | 2003, 2017 |
| 9. | பாடம் | 2011 | 2016 |
| 10. | துளிரும் சருகுகள் | 2012 | |
| 11. | படிக்க ஒரு பாடம் | 2009 | |
| 12. | மரணத்துள் வாழ்வு | 2009 | 2016 |
| 13. | சூறாவளி | 2013 | 2015 |
| 14. | பெயர்வு | 1998 | |
| 15. | சமூகவிரோதி | 2014 | |
| 16. | காத்திருப்பு | 2001 | 2005 |
| 17. | சர்ச்சை | 2006 | |

## கண்ணாடி வார்ப்புகள் நாடகம்
# இவர்கள் பார்வையில்....

### இந்த முழுமை இதுவரை கண்டதில்லை

கண்ணாடி வார்ப்புகளைப் பார்த்துக்கொண்டிருந்த போது யாழ்ப்பாணச் சமுதாயத்துக்கே உரியதான பிரச்சினை ஒன்றின் நாடக வடிவத்தைக் கண்டது போன்ற மனநிறைவு ஏற்பட்டது. கலையின் உலகளாவிய பண்பு என்பது இதுதான்... இவ்வளவு சிறப்பாக ஒவ்வொரு நடிகரும் தத்தம் பாத்திரத்தின் இயல்பை உணர்ந்து நடித்து நாடகத்திற்கு ஒரு முழுமையை அளித்தமையை நான் தமிழ் நாடகமொன்றிலும் இதுவரை கண்டதில்லை.

— காவலூர் இராசதுரை

### இருபது ஆண்டு ஏக்கம் நிறைவேறியது

"சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக நல்ல மேலை நாட்டு நாடகங்கள் தமிழில் இயங்கினவோ என்று நான் ஏங்குவதுண்டு. நல்ல கருத்துடைய நாடகங்கள் நற்றமிழில் நடந்தாலென்ன என்று தமிழும் தவித்ததுண்டு. தமிழ்க்கலை உலகு கைதூக்கி விடவேண்டிய ஒரு குழுவின் படைப்பு இது"

— இ. இரத்தினம்

### IT WAS A TREAT

"Tamil theatre being rare, it was a treat to see this play, let us hope more plays will come"

—Tribune, 24th March 1979

### SOCIALY RELEVANT

This play appears specially relevant to the social scene in the eyes of local producers."

—Ceylon Daily News 24th January 1979

### லண்டன் தயாரிப்புக்கு நிகரானது

எஸ். பொ. இந்த நாடகத்தை நீங்கள் லண்டனில் பார்த்ததாக அறிகிறோம். அதனோடு ஒப்பிடும் போது இத்தமிழ் நாடகம் பற்றிய உங்கள் கருத்து என்ன?

செ. வே. காசிநாதன்: நிச்சயமாக இது ஒரு வெற்றி என்று தான் சொல்வேன்

—"கலைக்கோலம்"

### முழுமையான தயாரிப்பு

"கட்டுக்கோப்பான நாடக வடிவமைப்பு, நடிகர்களின் கூட்டாட்சி, பாத்திரங்கள் மேடையில் உலாவும் பாங்கு, இவற்றிற்கு உறுதுணையாக நின்ற மேடையமைப்பு, ஒலியமைப்பு ஆகியன தரமான ஒரு நாடகமாக கண்ணாடி வார்ப்புகள் பரிணமிக்க முக்கிய காரணமாக விளங்கின"

— தினபதி. 26, ஜனவரி, 1979

### இரு சாதனைகள்


"அன்றைய தினம் லயனல் வென்ட் மண்டபம் நிறைந்திருந்தமை ஒரு சாதனை; நாடக முடிவில் சபையோரின் மனம் நிறைந்திருந்தமை மற்றொரு சாதனை"

— வீரகேசரி 18, மார்ச், 1979


கண்ணாடி வார்ப்புகள் 1999


கண்ணாடி வார்ப்புகள் 1999


கண்ணாடி வார்ப்புகள் 1999


துக்ளக் 1982


துக்ளக் 1982


சமூகவிரோதி 2014


மழை 1976

## எமது நாடக குடும்ப ஒன்றுகூடல் 2018 - 2017









Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?
ஒருவருட
சந்தா
£49
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய IPTV BOX
களை எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
HD
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
+
SUN NXT
4000 + திரைப்படங்கள்
புத்தம்புதிய திரைப்பாடல்கள்
நகைச்சுவை காட்சிகள்
SUBSCRIBE NOW!
0207 132 2727
www.lycatv.tv

# CASUARINA tree

Restaurant & Bar

Sri Lankan & Indo Chinese Cuisine



- Bed and Breakfast
- Function Room
- Beer Garden
- Shisha Bar
- Ample car park









020 8648 4868

407, London Road, Mitcham, Surrey, CR4 4BG, United Kingdom.

www.casuarinatree.com Info@casuarinatree.com